JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா



உயிர்த்தெழுந்த ஞாயிறு வாழ்த்துக்கள்!

அனுதினமும்

2014 ஏப்ரல்

"அவர் இங்கே இல்லை,
அவர் உயிர்த்தெழுந்தார்."
(பரி:லூக்கா 24:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## ஜீவ மன்னாவின் மூலம் ஆத்மீக எழுப்புதல்

அன்புக்கும் வணக்கத்துக்குமுரிய போதகருக்கு! முதற்கண் மனமார்ந்த உளங்கனிந்த நன்றிகள் என்றும் உரித்தாகட்டும். பிற மதத்தை சேர்ந்த நான் அநேக உபத்திரவங்கள், வேதனைகள், போராட்டங்களுக்கு அலைக்கழிவுகளுக்கு உட்பட்டு ஆன்மீக குருடியாக, செவிடாக, நொண்டியாக, ஊமையாக வாழ்ந்து வந்தேன். மேலும் அரசாங்க உத்தியோகத்தில் பணிபுரியும் எனக்கு இடமாற்றம் காரணமாக பெரிய பிரச்சினை ஏற்பட்டதோடு கணவனின் மனக்குழப்பம், பிள்ளைகள் இல்லை, பொருளாதாரப் பிரச்சினை, கௌரவப் பிரச்சினை என்ற எண்ணிடலங்கா பிரச்சினைகளுடனும் வாழ்ந்து வந்தேன்.

2013ம் ஆண்டு பெப்ரவரி மாத ஜீவ மன்னாவைக் கண்டதின் விளைவாக சனிக்கிழமை ஆராதனையில் கலந்துக் கொண்டதன் பின் தேவக் கிருபையால் என்னுடைய பிரச்சினைகள் முற்றும் முழுவதுமாக நீங்கியது. மேலும் இந்த ஜீவ மன்னாவானது எனது வாழ்க்கையில் என் உள்ளத்திலும் மூளையில் சிந்திக்கும் ஆற்றலினால் ஏற்பட்ட பெரிய பிளவு போன்ற ஆறாத காயங்களுக்கு ஒரு மாபெரும் ஔசதமாகவும் **(Antibiotic and Analgesic)** திகழ்ந்து என் வாழ்க்கையை தேவனுடைய காருண்யத்தால் நிரப்பி ஒவ்வொரு நாள் காலைதோறும் என் அன்றாட வாழ்வில், தீக்காயத்துக்கு தடவிய குளிர் மருந்தாகவும் அமைகிறது. போதகரின் ஞானத்திற்கும் எழுச்சியையும் வல்லமையுள்ள பொருத்தமான வசனங்களின் தெரிவுகளும் எனக்காகவே எழுதப்பட்டுள்ளனவோ எனத் தோன்றுகிறது. எம் போதகரை இவ்வண்ணமாக எடுத்து பயன்படுத்தும் கிருபைக்காக என் தேவனுக்கே நன்றி. நானும் வெகு விரைவில் மன்னா சஞ்சிகையை வெளியிடுவதற்கு பண உதவி செய்யும்படியாகவும் தேவன் என்னை நல்ல ஊழியக்காரியாகவும் பயன்படுத்த வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். எல்லா கனம் துதி மகிமையெல்லாம் என் தேவனுக்கே! செலுத்துகிறேன் நன்றி

*“வாழ்வை வழி நடத்தும்*
*வளப்படுத்தும், வலிமைப்படுத்தும்*
*ஆன்மீக வரப்பிரசாதமே*
*தித்திக்கும் ஜீவ மன்னா*
*திகட்டாத தேனமுதம்”*

இங்ஙனம்
மன்னா வாசகி
சகோதரி டி.சுசிலா
இராஜகிரிய

## 08 மாதகாலமாக மார்பு கட்டி மறைந்தது இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக!



சுபோதினி பதிராஜரத்ன
சீதுவ

08 மாதகாலமாக எனனுடைய வலது மாபில் தேசிக்காய் அளவு கட்டியினால் நான் அதிக வேதனைப்பட்டேன். இதனால் கொழும்பிலிருக்கும் அரசாங்க வைத்திசாலையில் வைத்தியரை நாடி பரிசோதித்த போது மார்பில் கட்டி பெரிதாக காணப்படுவதால் சத்திரசிகிச்சை செய்து அகற்ற வேண்டுமென மறு நாளே வைத்தியசாலைக்கு வரும்படி கூறினார்கள். நான் சத்திரசிகிச்சை செய்வதற்கு பயந்ததினால் வைத்தியசாலைக்கு போகவில்லை.

அதன் பின் சனிக்கிழமை ஆராதானையில் 05 கிழமைகள் கலந்துக் கொண்ட வேளையில் 05 வது கிழமையில் போதகர் மூலமாக தீர்க்கதரிசனமாக உங்கள் வலது மார்பில் பெரிதான கட்டி இருப்பதாகவும் சில வேளையில் மறைந்து விடுகிறது. சில நேரத்தில் மீண்டுமாக மார்பில் கட்டி தோன்றுகிறது எனக்கூறி முன் அழைக்கப்படடு ஜெபித்த பொழுது நான் முன்பதாக போய் ஜெபிக்காகமல் இருந்த இடத்திலே இருந்து ஜெபித்தேன். வேதனை நீங்கி 08 மாதகாலமாக இருந்த மார்பு கட்டி மறைந்தது. தேவனுக்கே முழு உள்ளத்தோடு நன்றி தெரிவிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை இயேசு ராஜனுக்கே

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

**பாவிகளை நேசிக்கும், பாவங்களை வெறுக்கும் இயேசுகிறிஸ்து!**

இவ்வண்ணமாக ஜீவ மன்னா தின தியானங்கள் 31வது வெளியீடுகள் வரை உங்களுக்கு தயாரித்தளிப்பதற்கு சகல பொருளாதார காரியங்களையும் சந்தித்து எமக்கு அநுக்கிரகம் செய்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள். இந்த ஆசிரியர் உரைக்கூடாகவும் ஒரு தேவ செய்தியை பகிர்ந்துக் கொள்ளக் கொடுத்தமைக்காக தேவனுக்கே நன்றி சொல்லுகின்றேன்.

இயேசுகிறிஸ்துவைக் 30 வெள்ளிக்காசுக்காக காட்டிக் கொடுத்த யூதாஸின் மரணமோ மிகப் பயங்கரமானதும் பரிதாபகரமானதும் என்பதனை மத்தேயு 27ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். அவனுக்குள் சாத்தான் புகுந்த வேளை அன்பான நண்பனாகிய இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான். அதன் பிறகு அந்த 30 வெள்ளிக்காசை ஆசாரியரிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொடுத்துவிட்டு குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அத்தோடு அந்த வெள்ளிக்காசைக் தேவலாயத்தில் எறிந்து விட்டு புறப்பட்டுப் போய் நாண்டு கொண்டு செத்தான் என வேதாகமம் கூறுகிறது. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுவிடம் இன்று எமது திரளான பாவங்களுக்கும் மன்னிப்பு உண்டு. மனந்திரும்புகின்ற ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகும் என்பது நாம் அறிந்ததொன்றே. இயேசுவினால் குணமாக்க முடியாத நோய் இவ்வுலகில் இல்லை. அத்தோடு அவரினால் மன்னிக்க முடியாத பாவங்களும் இல்லை. இயேசுவிடம் வாசம் பண்ணுகின்ற பரிசுத்த ஆவியானவரையே நாமும் பெற்றிருக்கிறோம். நாம் பரிசுத்த ஆவியானவரை எமது பரிசுத்த வாழ்க்கையினால் பாதுகாத்துக் கொள்வோம்.

ஜீவ மன்னாவை நுகரும் வாசகர்களாகிய ஆவிக்குரிய சகோதர சகோதரிகள் ஒவ்வொரு மாதமும் வெளியிடுவதற்கு தேவையான பணத்தை தந்துதவியதால் எமக்கு இந்த தேவ இராஜ்ஜியத்திற்குரித்ததான காரியங்களை செய்ய இலகுவாகவும், பெரிய உதவியாகவும் அமைந்தது. வாசக பிள்ளைகளே! சந்தோஷமாக காணிக்கைகளை தேவ இராஜ்ஜியத்தின் காரியங்களுக்காக மனமுவந்து கொடுக்க முன் வருவீர்களாயின் உங்களை தேவன் அதற்கான பலனைக் கொடுத்து ஆசீர்வதிப்பார். அத்தோடு வாசகக் கட்டணங்களையும் உரிய நேரத்தில் அனுப்பி எமக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். எனக்காக ஆத்மீக காரியங்களைத் தொடருவதற்கு ஆத்மீக பெலன் தைரியம் கிடைக்கும்படியாக தேவனை நோக்கி ஜெபிக்கின்ற உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள். உங்கள் அனைவரையும் மரித்தோரிலிருந்து உயிர்த்த இயேசு ஆசீர்வதித்து உங்களை அனுதினமும் கரம் பிடித்து ஆத்மீக வாழ்க்கையில் முன் கொண்டு செல்வாராக!

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்


**வளப்படுத்தும், வலிமைப்படுத்தும் ஜீவமன்னா!**

**தித்திக்கும் திகட்டாத ஜீவமன்னா!**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தளத்திற்கூடாக இணைந்து இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்துவோம்!




அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் உபாகமத்தில் 28:2இல் தேவனாகிய கர்த்தர் எமக்கு எழுதியுள்ளதாவது நீ உன் கர்த்தரின் சத்தத்துக்குச் செவி கொடுக்கும் போது இப்போது சொல்லப்படும் ஆசீர்வாதங்களையெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் "பலிக்கும்" என்றாகும். தேவனின் பிள்ளைகள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தேவனின் ஆசீர்வாதங்கள் அவர்களை நோக்கி தேடி அவர்களைத் தொடர்ந்து வந்து தேவனின் பிள்ளைகளோடு நிலைத்திருக்கும்.

தேவ பிள்ளைகளே! எங்கள் பணியகத்தில் நடைபெறுகின்ற சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனை, ஞாயிறு ஆராதனை இணையதளத்திற்கூடாக எமது தேசமெங்கும், அத்தோடு வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கை வாசிகளுக்கு நேரடியாகக்காண சந்தர்ப்பங் கிடைத்துள்ளமையால் அவர்களின் வாழ்க்கையில் கிடைக்கப் பெறும் சாட்சிகளின் நிமித்தம் மேற் கூறப்பட்ட தேவ வசனம் இன்றும் நிறைவேறுவதை எங்களால் உறுதிப்படுத்த முடியும்.

கடந்த மார்ச் 01ம் திகதி சனிக்கிழமை ஹங்கேரியாவிலிருந்து "ஸ்கைப்" மூலமாக எங்களோடு நேரடி தொடர்பு கொண்ட காஞ்சனா எனும் சகோதரி இவ்வாறு கூறினார். அவருடைய மகனுக்கு சுமார் 8 வருட காலமாக ஒரு பாதத்தில் சரும நோய் ஏற்பட்டு ஹங்கேரியாவிற்குச் சென்ற பின்னர் அதிகமாகி 3 முறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் கூறினார். 3வது முறை மகனின் பாதத்தில் 3 புண்கள் இருந்ததாகவும் அந்த புண்கள் காணப்பட்ட இடங்களில் சதையில் ஒரு துண்டு எடுத்து பரீட்சித்ததன் பின்னர் வைத்தியர்கள் மகனின் பாதத்தின் புண்களை வைத்தியர்களால் குணமாக்க முடியாதென்றும் வைத்திய சிகிச்சையின் மூலம் ஓரளவு சுகத்தையே பெற்றுக் கொள்ள முடியுமெனக் கூறியிருக்கிறார்கள் ஆனாலும் சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனை இணையத்தளத்திற்கூடாகக் கலந்து ஜெபத்தில் தரித்திருந்த வேளையின் பின் 8 வருட சரும நோய் சுகமாகி விட்டதாக சாட்சி கொடுத்தார். மகன் சுகமடைந்து இரு கிழமையின் பின்னர் சகோதரி தனது வலது கண்ணில் ஏற்பட்ட ஒரு பாதிப்பிற்கு வைத்தியப்பரிகாரம் பெற்றுக் கொண்டிருந்த நிலையும் மாறி கண்களிலும் பரிபூரண விடுதலை கிடைத்து குணமாகினேன் அத்தோடு எனது குடும்பத்தினர் அனைவரும் மிகுந்த சுகத்தோடு வாழ்கிறோம்.




அது மட்டுமல்லாது பொருளாதார நிலையிலும் சகல சிக்கல்களும் நீங்கி விட்டதென்றும் ஞாயிறு ஆராதனையில் நேரடியாக பார்த்து ஆத்மீக போசனைகளைப் பெற்றுக் கொள்கிறோம். என்றும் கூறினார்கள் உங்களுக்கும் எங்களோடு தொடர்பு கொள்ள முடியும். அப்படியே வெளிநாடுகளில் வசிக்கின்ற உங்கள் நண்பர்கள், உறவினர்கள் இதை அறிமுகப்படுத்தி இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் வழிகாட்டுங்கள், உங்கள் சாட்சிகள் ஆயினும் சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையின் போது முதலாவதாக தொலைபேசிக்கூடாகக் கூறி பின்னர் ஸ்கைப் மூலமாக நீங்கள் நேரடியாகவே தொடர்பு கொள்ளலாம்.

**இயேசு துணை!**

இப்படிக்கு
போதகர் ஏ.ஜே.ஜோசப்

**நீங்களும் எம்மோடு இணைந்து! இயேசுவின் நாமத்தை உயர்த்துங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 01
செவ்வாய்

# ஆபத்து வேளையில் எம்மோடிருந்து தப்புவித்து கனப்படுத்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 01 – 02

**"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்."** (சங்கீதம் 91:15 )

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வளமிகு நல் நாளாக இன்றைய நாள் இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதர்களாகிய நாம் எமது வாழ்க்கையில் **சாத்தான் விரிக்கும் வலைகளில் எப்படி அகப்படுகிறோம்** என்பதனை அறியாதவர்களாக வாழ்கிறோம். **சிலந்தியானது** தனது **வலையில் சிறிய பூச்சிகள் சிக்குமிடத்து** அது எப்படியாவது சுற்றி இறுக்கி பிடித்துக் கொள்வதைப் போல மனிதனது வாழ்வில் மிகவும் ஒரு சிறிய **சந்தர்ப்பம் சாத்தானுக்கு** கிடைக்கும் போது அந்த மனிதனைத் தொடர்ந்து **சாத்தான்** தனது வலையில் **சிறைப்படுத்திக்** கொள்ள முயற்சி செய்வான். ஆனாலும் **கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **சங்கீதம் 91:15**இல் கூறப்பட்ட தேவ வசனத்தை நன்றாக வாசித்து அதை **தியானித்துப்** பாருங்கள். ஏனென்றால் அங்கு எழுதியிருப்பது **"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான் நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்." ஆபத்தில்- நானே அவனோடிருந்து தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன் என்றாகும். சிலந்தி** அதிகமாக **சிரமப்பட்டு,** மிகக் **கஷ்டத்தோடு வலையைச்** செய்திருந்தாலும், அந்த வீட்டின் **உரிமையாளர்** முற்றுமாக **அகற்றும்படியாக வலையைத்** தட்டி **வீழ்த்தியவுடன்** அது **அழிந்து** அது இருந்த இடத்தைக் கூட தேட முடியாமல் போய் விடுகிறது இப்படியே உங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி **ஜெபிக்கும்** போது தேவன் பதில் கொடுக்கும் முகமாக சாத்தான் உங்களைச் **சிறைப்படுத்தியிருக்கும்** சகல **கட்டுகளையும்** அழித்து மீண்டும் **பழையவைகளை** சிந்திக்க முடியத **வண்ணம்** உங்களை மீட்டுக் கொள்வார் தேவன் உங்களை அதிகமாக நேசிக்கின்றபடியால் தனது ஒரே பேறான குமாரனாகிய **இயேசுகிறிஸ்துவை** உலகிற்கு அனுப்பினார். இயேசுகிறிஸ்து சிலுவையில் பலியானார். எம்மை **சாத்தானின் பாவ, சாப அடிமைத்தனங்களினின்றும்** மீட்டுக் கொள்ளும்படியாக அவருடைய **பரிசுத்த இரத்தத்தைச்** சிந்தி எங்கள் அனைத்து **பாவங்களையும்** அவரின் இரத்தத்தால் கழுவி **பரிசுத்தமாக்கி** எம்மை கிட்டிச் சேர்த்துக் கொண்டார்.

தேவ பிள்ளைகளே! தேவன் தனது குமாரனை உலகிற்கு அனுப்பியது **சாத்தானின் அடிமைத்தனங்களினின்றும் கட்டுக்களினின்றும்** எம்மை **விடுதலையாக்கி பிசாசின் தந்திரமான** செயல்களை **அழிப்பதற்காகவேயாகும்.** நான் **முப்பது வருடமாக** தேவனோடு **நெருங்கி ஜீவித்தபடியினாலேயே** என்னை **நெருங்கிய உபத்திரவங்கள், பிரச்சினைகள், சவால்கள்** அனைத்திலும் என்னை மீட்டுக் கொண்டார். தேவன் உங்களோடும் அப்படியே இணைந்திருப்பார். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் சர்வ பராக்கிரமுள்ள தேவன் உங்கள் கிரியைகள் பிரமிக்கத்தக்கவைகள். உங்களை அறிந்து கொள்ள என்னுடைய ஞானம் போதாது. நீங்கள் என்னை ஞானத்தால் நிரப்புங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்."
(யோபு 5:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் **02**
புதன்

# ஆலோசனைக் கர்த்தர் உங்களோடு !


இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள் அதி: 03 – 04

**"சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே, யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்;"** (எரேமியா 32:18,19)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு இனிமையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன். இவ்வுலகில் சுமார் 700 கோடி ஜனங்களுக்குள் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.*** ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்பவரும், பரிசுத்தரும் மகா வல்லமையுடையவருமான தேவன் உங்களோடு இருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! ***எரேமியா 30:21***இல் அவரைச் சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார், என்னிடத்தில் சேரும்படி தன் ***இருதயத்தைப் பிணைப்படுத்துகிற இவர் யார்?*** என்று கர்த்தர் சொல்லுகிறார். அதுமட்டுமல்ல ***யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிற*** தேவன் என்று மேற்கூறப்பட்ட பிரதான வசனமாகிய ***எரேமியா 32:19***இல் காண்கிறோம். நீங்கள் பலவீனமானவர்களாக இருக்கிறீர்களா? உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருக்கிறபடியால் உங்கள் அனைத்து ***பலவீனங்களையும் அகற்றி உங்களை வல்லமையால், திறமைகளால்*** நிறைந்த பூரண மனிதனாக மாற்றுவார். இன்னுமாக தேவன் ***ஆலோசனைகளில்*** மேலானவர் என்பதால் உங்கள் வாழ்க்கையில் ***எதிர்கொண்டிருக்கும்*** எந்தவிதமான ***பிரச்சினைகளாயினும்*** அவைகளுக்கு ஏற்ற ***பதிலைக்*** கொடுக்க, ***தீர்ப்பைக்*** கொடுக்க தேவன் ***வல்லமையுள்ளவராக,*** யாவையும் செய்து முடிப்பவராக இருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! ***உங்கள் பிரச்சினை, சிக்கல்*** எவ்வளவு ஆழமானதாயினும் உங்களது அறிவினாலும் உங்களது ஞானத்தினாலும் தீர்த்துக் கொள்ள முடியாமற் போனாலும் நீங்கள் அதைக் குறித்து கவலைக் கொள்ளாதிருங்கள். உங்கள் பலத்தினாலும், உங்கள் அறிவினாலும் அதை முடிவு செய்ய முயற்சி செய்து இன்னும் அந்தப் பிரச்சினையை பெரிதாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் தேவனின் பாதத்தில் உங்கள் ***பிரச்சினையை, குழப்பங்களை வைத்து ஜெபியுங்கள்.*** அப்பொழுது அதை எப்படி தீர்த்துக் கொள்வது? என்று அதற்கான ***வழியை*** எமக்குக் காட்டுவார். ஆகையால் உங்கள் யோசனைகள் உங்கள் கருத்துக்கள் தேவனுக்கு முன் வைக்காமல் தேவனின் முன்னிலையில் நீங்கள் மிகவும் கீழ்ப்படிந்து, தாழ்ந்து தேவனின் ***ஆலோசனைகளை*** எதிர்பாருங்கள். ***நூல் பந்தைப்*** போல ***சிக்கல்கள்*** ஏற்பட்டு முடிவைத் தேடிக் கொள்ள முடியாதபடி இருக்கின்ற உங்கள் ***பிரச்சினைகள், சிக்கல்கள் அனைத்திற்கும் தீர்ப்பைப்*** பெற்றுக் கொள்ள தேவன் ***கிரியை*** செய்வார். இயேசுகிறிஸ்துவின் ***சிந்தையே*** உங்களில் இருக்கக்கடவது. ***இன்று வெற்றிகரமான நாள்!***



ஜெபம்

என் தேவனே! நீங்கள் ஆலோசனையில் பெரியவரான கர்த்தர் அப்படியே செய்கையிலும் வல்லவராயிருக்கிறீர். உங்கள் ஆலோசனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

**"மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்."**
**(நீதிமொழிகள் 19:21)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 03
வியாழன்

**வாழ்வில் வரும் சூரியனின் வெப்பத்தைப் போன்ற வேதனைக்கு நிழலாக தேவன் உங்களோடு !**

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 05 - 06

**"பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும்."** (ஏசாயா 4:6)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாளும் உங்களுக்கு நன்மைகள் நிறைந்த நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** சில நாட்களில் சூரிய வெப்பம் **அகோரமாக** இருப்பதோடு சில நாட்களில் சாதாரண **வெப்பமும்** இல்லாமல் **மந்தமான** நிலையையும் காணக் கூடியதாக இருக்கின்றது. **சூரியனது உஷ்ணம்** இப்படியாக இருப்பினும் மனிதர்களது வாழ்க்கையில் பகலின் வெப்பத்தினைப் போன்று **உள்ளத்தில் எரிகின்ற வேதனைகளோ!** ஏராளமாக இருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! சில வேளைகளில் ஆத்மீக பிள்ளைகளுக்கு இவ்வண்ணம் நேரிடலாம். ஆனாலும் உங்களில் பகலின் உஷ்ணத்தை போன்ற **வேதனைகளினின்று** காப்பாற்ற தேவன் உங்களோடிருக்கிறார். **பெரும்பாலான** நேரங்களில் என்னால் தாங்க முடியாத துன்பங்கள், பிரச்சினைகளின் போது **என் உள்ளம் வேதனை அடைகையில்** நான் தேவனுடைய **சமூகத்தில்** அமர்ந்து நான் கூறுகிறதாவது, **ஐயோ!** இயேசுவே என்னால் இதற்கு மேலாக **வேதனைகளை** தாங்க முடியாது. ஏன் என் மேல் இரக்கங்கொள்ளாமல் இருக்கிறீர்கள்? என்றாகும். அப்பொழுது என்னை **தைரியப்படுத்துகின்ற** வசனங்களைக் கூறி என்னை **தைரியப்படுத்துவதோடு** சில வேளைகளில் என்னுடைய ஊழியங்களைக் குறித்தும் தேவ சபையைக் குறித்து தேவன் எதிர் காலத்தில் செய்யப் போகின்ற காரியங்களை வெளிப்படுத்தி, என் மனதின் **சிந்தனைகளை** வேறொரு காரியத்திற்குச் செலுத்த வைத்து என்னை **ஆறுதல்படுத்துவார்.** அப்படியான **சந்தர்ப்பங்களில்** தேவன் எனக்கு கூறிய மிக அருமையான வசனம் **அதி வரைவில் உன் சபையில் ஆச்சரியமானவைகளை ஜனங்கள் கேட்கப் போகிறார்கள்** என்றாகும். இது சில தினங்களுக்கு முன்பதாக தேவன் கூறியதாகும். அன்று என்னுடைய **வேதனைகள்** யாவும் என் **மனதைவிட்டு** அகன்று போக நான் தேவன் கூறிய வசனத்தைக் குறித்து தியானம் பண்ணி அதன் பிறகு தேவனுடைய அன்பை, **மனதுருக்கத்தை** நினைத்து கண்ணீரோடு ஜெபம் செய்வேன்.

தேவ பிள்ளைகளே! தேவன் எம்மை ஆறுதல்படுத்தும் முறையோ மிக அற்புதமானது. உங்கள் வாழ்க்கையில் இருக்கும் **பிரச்சினையின்** காரணமாக இதயமே வெடித்து விடும் போல் இன்று வேதனைப்படுகின்றீர்களா? நீங்கள் வாழ்வில் மனக் **கலக்கமுற்று** காணப்படுகின்றீர்களா? **நீங்கள் தேவனை விசுவாசித்து தேவனுடைய பாதத்தை இடைவிடாது பற்றிக் கொண்டு ஜெபியுங்கள்.** பகலிலே தாங்க முடியாத **சூரிய வெப்பத்திற்கு குளிர்ச்சியான நிழலைப் போன்று உங்கள் உள்ளத்தில் எரிகின்ற வேதனைக்கு ஆறுதலாக தேவன் உங்களோடு இருப்பாராக!** மனிதர்கள் உங்கள் **வேதனையில் உங்களைக் கைவிட்டு விடுவார்கள்.** ஆனால் தேவன் **ஒரு போதும் உங்களைக் கைவிட மாட்டார். உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

ஏன தேவனே! பகலின் அதி வெப்பத்தைப் போன்று எனதுள்ளத்தில் எரிகின்ற வேதனையை நீங்கள் காண்கிறீர்கள். நீங்கள் எனக்கு நிழலாக இன்று நீங்கள் என்னோடு இருப்பீர்களாக!
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

**"இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்."**
**(சங்கீதம் 147:3)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 04
வெள்ளி

**தேவ சத்தத்திற்கு செவி கொடுக்கும் போது உங்களை ஆசீர்வதிக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 07 – 08

**"நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்."** (உபாகமம் 28:2)

அன்புக்குரியவர்களே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளும் மகிழ்ச்சிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.*** அத்தோடு தேவ செய்திக் கூடாக உங்களைச் சந்திக்கிறேன். எங்களை ***பூமிக்குரியவைகளாலும், ஆவிக்குரியவரங்களினாலும்*** எம்மை ***ஆசீர்வதிக்க வல்லவர் ஒரேயொருவர்*** இயேசுகிறிஸ்துவே என்பதால் அவரை ***விசுவாசிக்கின்ற*** நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆனாலும் நாம் ஒருவரும் தேவன் எம் வாழ்க்கையில் இடைபட வேண்டுமென அழைப்பு கொடுப்பதில்லை. ஆனாலும் ***தாயின் கர்ப்பத்திலிருந்து*** எங்களைத் தெரிந்து, பெயர் சொல்லி அழைத்து, எங்களை இயேசுவண்டை வரவழைத்துக் கொண்டது எம்மைத் ***தாயின் கர்ப்பத்தில்*** உருவாக்கியது எமது ***சிருஷ்டித்த*** தேவ பிதாவேயாவார்.

தேவ பிள்ளைகளே! எம்மை உருவாக்கிய ***தேவ பிதாவானவரின் ஒரே பேறான குமாரனான,*** எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்துவிடம் எம்மை அழைத்து மகனுக்கூடாக எம்மோடு பேசி எம்மை ***ஆசீர்வதிப்பதற்கு*** இன்றும் கிரியை செய்பவராக இருக்கின்றார். மனிதனது ***சரீரமானது அழிந்து போகும்*** ஆனாலும் மனிதனது ***ஆத்துமா சதாகால ஜீவனை*** அல்லது ***சதாகால மரணத்தை அடையும்*** என்பதும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் ***உள்ளம் கலங்காதிருங்கள்.*** பரலோக தேவ பிதாவானவரின் ***சொந்தப்*** பிள்ளையான உங்களுக்கு ***சதாகால ஜீவன் உரிமையாகின்றது.*** மேலும் மேற் கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் அனைத்து ***ஆசீர்வாதங்களையும்*** எமக்கு உரிமையாக்கிக் கொள்வதற்கெனின் அவைகள் எங்கள் வாழ்க்கையில் நிலைத்திருக்க வேண்டுமெனின் நாம் ஒன்று செய்தாக வேண்டும் அது என்னவென்றால் தேவனின் சத்தத்திற்கு நாம் ***மிக கருத்தோடு செவி கொடுக்க வேண்டும்.***

தேவ பிள்ளைகளே! சில வேளைகளில் ***ஆத்மீக பிள்ளைகள்*** கூட அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் காண ***வெளிநாடுகளுக்கு*** செல்ல வேண்டும் என நினைக்கிறார்கள். ஆனாலும் இன்றைய தினத்தில் இயேசுகிறிஸ்து உங்கள் அனைவருக்கும் கூறுவதாவது தேவ வசனத்திற்கு ***மிகக் கருத்தோடு செவிக் கொடுத்து*** அந்த வசனத்தை உங்கள் வாழ்க்கையில் ***கடைப்பிடித்து*** வாழ்வீர்களானால், எல்லா ***ஆசீர்வாதங்களும்*** உங்களுக்கு கிடைக்குமென்பதே, நீங்களும் இன்றைய நாளில் இப்படியாக ***கிரியை*** செய்யும் போது நீங்கள் ***அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள். இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! உங்கள் சத்தத்திற்கு கருத்தோடு செவி
கொடுக்கவும், உங்களின் வசனத்தின்படி நான் வாழ்ந்து
ஆசீர்வாதங்களைப் பெற எனக்கு உதவி செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமேன்~

வேத வாக்குத்தத்தம்

"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்." (யோசுவா 1:8 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 05 சனி

## ஆத்தும மீட்பு மிகவும் அருமையானது !

இன்றைய வேதவாசிப்பு

நீதிமொழிகள் அதி: 09 – 10

**"அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது;..."**
(சங்கீதம் 49:9)

அருமை மிகு தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றைய நாளிலும் இனிமையான காலைப் பொழுதாகட்டும் என வாழ்த்துகின்றேன்.** மனிதனது வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும் இருப்பதை நாம் நன்கறிவோம். ஒரு மனிதன் இவ்வுலகில் பிறப்பதே அவனது வாழ்க்கையின் ஆரம்பமாவதோடு, அவன் **முதிர்வயதாகி** இறக்கும் போது அவனது சரீரம் நிலத்திற்கடியில் அடக்கம் செய்யப்படுவது அவனது வாழ்க்கையின் முடிவாகும். **குறைந்தது 70 வருடம் அல்லது 80 வருடம் கால வரையறையில்** உலகில் வாழ்கின்ற எமக்கு தேவனின் பரிசுத்த ஆவியைத் தந்து தேவனின் சொந்த ஜனங்களாக எம்மை வேறுபிரித்தமையால் நானும் நீங்களும் அதி **விஷேசித்தவர்கள்.**

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பிட்ட பிரதான தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது ஆத்தும மீட்பு மிகவும் அருமையானதொன்றாகும் என எழுதப்பட்டுள்ளது. உங்களுக்குள் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்து உங்களுக்குக் கொடுத்த இரட்சிப்பு **மிக அருமையான சொத்து** என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு **ஜீவனை** அளித்துள்ளார். அந்த ஜீவனை உங்களுக்குள் வாழ்கின்ற பரிசுத்த ஆவியானவருக்கூடாக தேவன் தந்திருக்கிறார். ஆகையால் தேவனுடைய குமாரன் பேரில் **விசுவாசங்கொண்ட** உங்களுக்கு தேவனின் **ஜீவனை** பெற்றுக் கொண்டமை மிக அருமையான **பாக்கியமாகும்.** அப்படியே இன்றைய நாளில் பிரதான **தேவவசனத்தில்** கூறுவது நீங்கள் மற்ற மனிதர்களின் ஆத்தும மீட்புக்காக நீங்கள் செயல்பட வேண்டுமென்பதே, உங்களுக்குள் **வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர்** நீங்கள் பெற்றுக் கொண்ட ஜீவனை மற்ற மனிதருக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதே வாஞ்சையாக இருக்கின்றது. அது தேவனின் **பிரியமாகவும், சித்தமாகவும்** இருக்கின்றது. ஆகையால் ஒரு மனிதன் அவனது **பாவத்தால்** அழிந்து போவானாகில், எப்படியாவது அம்மனிதனை **அழிவினின்று தப்புவித்து மீட்டு** அவனது வாழ்வில் காணப்படும் அனைத்து பாவங்களிலிருந்தும் அவன் விடுபட வழிகாட்டுவது எங்களுக்குரிய உத்தரவாதமாக இருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! மனிதனானவன் தனது வாழக்கையை அவன் வாயிலிருந்து புறப்படும் வசனங்களால் மாற்றிக் கொள்ள முடிகிறதான **பெரிய வல்லமையை** பெற்றிருக்கிறான். **வாழ்க்கையில் எதிர்பார்ப்புக்களை இழந்து, வேதனையை தாங்கிக் கொள்ள முடியாத பட்சத்தில் தற்கொலை** செய்து கொள்ளப் போகும் மனிதனது வாழ்க்கையை மீட்டுக் கொள்ளவும், கொலைக்காரனாக **சமுதாயத்தில்** புறம்பே தள்ளப்பட்ட **குற்றவாளியொருவனின்** வாழ்க்கையில் ஒரு **புதிய மாறுதலை** உருவாக்கவும் நீங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சில வசனங்களைக் கூறுவதும் உங்களுக்கு **ஆசீர்வாதமாகவிருக்கும். இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனக்குக் கொடுத்த இரட்சிப்புக்காக ஸ்தோத்தரம். எனக்குள் நீங்கள் வைத்திருக்கும் ஜீவனை மற்றவர்களுக்கு பெற்றுக் கொடுக்க நீங்கள் என்னை ஆசீர்வதித்து எல்லா வேளையிலும் எனக்கு வழிகாட்டுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு: நீர் அவனை இரட்சியும்; மீட்கும் பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார்." (யோபு 33:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 06 ஞாயிறு

## மனிதருடைய யோசனைகள் வீண் என்கிறார் நம கர்த்தர்!

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள் அதி: 11 – 12

**"மனுஷனுடைய யோசனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்."**
(சங்கீதம் 94:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றும் உங்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த காலைப் பொழுதாகட்டுமென வாழ்த்துகின்றேன்.** இன்று உலகில் **சுமார் 700 கோடி** ஜனங்கள் இருப்பதாக **கணக்கிட்டு** இருக்கின்ற வேளையிலும் அவர்கள் அனைவரிலும் தங்கள் **உள்ளத்தின் எதிர்ப்பார்ப்புகள், ஆசைகள், நினைவுகள்** நிறைவேறப் பெற்றவர்கள் எத்தனைப் பேர்களோ என்பதனை நீங்களும் நானும் அறிய வாய்ப்பில்லை.

தேவ பிள்ளைகளே! மனிதர்களது உள்ளத்தில் காணப்படும் **ஆசைகள், நினைவுகள், எதிர்பார்ப்புக்கள்** அனைத்தும் அவர்கள் நினைக்கும் விதத்தில் நிறைவேறாது அவர்களின் வாழ்க்கையில் **துக்கம், வேதனைகள்,** நிறைந்திருக்கலாம். ஆனாலும் நீங்கள் கலங்க வேண்டாம். ஏனென்றால் இவ்வுலக மனிதரைப் போலல்லாது இந்த ***ஜீவ மன்னா*** தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் **விஷேசித்தவராவீர்கள்.** நீங்கள் இன்றைய நாளில் இதனை **வாசிக்குமிடத்து** பிரதான சபைப் **போதகர் ஏ.ஜே.ஜோசப்** ஆகிய நானல்ல உங்களைத் **தாயின் கர்ப்பத்தில்** உருவாக்கி உலகில் பிறக்கும்படியாகச் செய்து பெயர் சொல்லி இயேசுகிறிஸ்துவிடம் அழைத்துக் கொண்டது உங்கள் **பரலோக சிருஷ்டிப்பின்** தேவ பிதாவானவரே, பரலோகப் பிதாவின் ஒரே பேறான குமாரனான இயேசுகிறிஸ்துவை உங்களுக்காக இவ்வுலகிற்கு அனுப்பி தேவன் தம்மிடம் உங்களை அழைத்து உங்களை உலகில் வேறுபிரித்துக் கொண்டு **பரலோக இராஜ்ஜியத்தின் சொந்தப் பிள்ளைகளாக்கிக் கொண்டார்.** நீங்கள் இப்பொழுது சொந்தமாகி இருப்பது வானத்தையும், பூமியையும் முழு உலகத்தையும் படைத்து ஆளுகை செய்யும் சர்வ பராக்கிரம மகா வல்லமையான தேவனுக்கே!

தேவ பிள்ளைகளே! மனிதனது **நினைவுகள் வீண்** என்று தேவன் நன்கறிந்திருக்கிறார் என பிரதான வேதாகம வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. உங்கள் வீணான சிந்தனை அல்ல உங்களைக் குறித்து **உயர்ந்த, நன்மையான யோசனைகள், திட்டங்கள்** வைத்திருக்கின்ற உங்களை உருவாக்கிய தேவன் உங்களோடு. தேவன் அவைகளை ஒன்றொன்றாக உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றி உங்களை **ஆசீர்வதிப்பார்.** சொந்த பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டியது என்ன? என்றும் அவர்களுக்கு நன்மையானவைகள் என்ன என்றும் **மாம்சத்திலிருக்கும்** பெற்றோர்கள் அறிந்தார்களாயின், பரலோகத்திலிருக்கும் **சிருஷ்டிப்பின்** தேவன் தான் உருவாக்கிய பிள்ளைகளைக் குறித்தும், அவர்களின் தேவைகளைக் குறித்தும் எவ்வளவு **அக்கறையோடு இருக்கக்கூடும்?** என்று நீங்கள் நினைத்துப் பாருங்கள். உங்கள் நினைவுகள் **வீணென்று பயப்படாதீர்கள். இன்று உங்களுக்கு வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! என்னுடைய நினைவுகள் வீணென்று நான் இன்று அறிந்துக் கொண்டேன். ஆனாலும் நான் பயப்படமாட்டேன் நீங்கள் என்னைக் குறித்து மேலான யோசனைகள் திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள். அவைகளை எனக்குள் நிறைவேற்றி என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசாயா 55:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 07 திங்கள்

## உங்கள் வாழ் நாட்களிலெல்லாம் உங்களை பொறுப்பேற்றுள்ள தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள் அதி: 13 – 14

**"உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்துவந்தேன்; இனிமட்டும் நான் உங்களைத் தாங்குவேன்;"** (ஏசாயா 46:4)

அருமையான தேவ பிள்ளைகளே! **இன்றைய நாளில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எல்லா செயல்களிலும் வெற்றி பெற்று நலமுடன் வாழும்படியாக இந்த காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** நாம் வாழும் ஆச்சரியமான உலகினைக் குறித்தும், அதன் அற்புதமான கிரியைகளைக் குறித்தும் நாம் அறிந்து கொண்டுள்ளது **மிகச் சொற்பமேயாகும்.** அப்படியே அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ள மனித சரீரம் அத்தோடு அதன் ஆத்துமா **சம்பந்தமான** செயற்பாடுகளையும் குறித்து அறிந்திருப்பதும் மிக சிறிதளவேயாகும். அதனை விளக்கிக் கூறினால் எமது வாழ்வு, எங்கள் நாளைய நாள், **எதிர்காலம்** இவைகளைக் குறித்து நாம் எதையும் அறியாதவர்களாகவே வாழ்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் **பிரசங்கி 6:12**இல் மனுஷனுக்கு இந்த **ஜீவனில்** நன்மை இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப் பின்பு சூரியனுக்குக் கீழே சம்பவிக்கும் காரியம் இன்னதென்று அறிவிப்பவன் யார்? என்று எழுதியுள்ளபடியால் நாம் எதுவும் அறியோம் என்பது தெளிவாகின்றது.

தேவ பிள்ளைகளே! மனித **ஜீவியத்தில் என்ன நடக்கும்?** அவைகள் **எப்படி நடக்கும்?** என்று நாங்கள் அறியாமல் இருக்கின்ற போது எங்கள் வாழ்க்கையைக் குறித்த பொறுப்பை முதன் முதலாக ஏற்றுக் கொண்டது எங்கள் **சிருஷ்டிப்பின் தேவன்.** ஆகையால் வாழ்க்கையைக் குறித்து பயம் கொள்ள அவசியமில்லை. **தாயின் கர்ப்பத்திலிருந்து** எங்களைத் தேர்ந்தெடுத்து எங்களை **பெயர்ச் சொல்லி** தேவன் தன்னிடத்தில் எங்களை அழைத்து **கிட்டிச் சேர்த்துக் கொண்டார்.** அந்த அழைப்புக்கு கீழ்ப்படிந்து தேவனின் பிள்ளைகளான எம் அனைவரது வாழ்க்கையையும் சதாகாலத்திற்கும் தேவன் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். மேற் கூறப்பட்ட **ஏசாயா 46:4**இல் பிரதான வேதாகம வசனத்தில் உங்கள் **முதிர் வயது** வரைக்கும் நான் அப்படிச் செய்வேன், நரை வயது மட்டும் நான் **உங்களைத் தாங்குவேன்.** நான் அப்படிச் செய்து வந்தேன். இனி மேலும் **நான் ஏந்துவேன். நான் சுமப்பேன், தப்புவிப்பேன்** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வசனத்தை சற்று தியானித்துப் பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! தங்கள் வாழ்வில் எதிர் வரும் நேரத்தைக் குறித்தோ எதுவுமேயறியாத மனிதனுக்கு **உன் முதிர் வயது வரைக்கும் நரை வயது வரைக்கும் நான் உன்னை பாதுகாத்துக் கொள்வேன்.** என்று தேவன் எங்களுக்கு கூறுவராகில் அது மனிதனுக்கு **எவ்வளவு பெறுமதிமிக்கது?** இன்றைய நாளில் முதல் முறையாக **மன்னா தினதியானங்களை** வாசிக்கும் நீங்களும் இந்த **வேத வசனத்தை** உங்கள் உள்ளத்தில் ஆழமாக பதித்துக் கொண்டு உங்கள் முழு மனதோடு தேவன் பேரில் **விசுவாசங் கொள்ளுங்கள்.** நீங்கள் தேவ வசனத்தின்படி ஜீவிக்கும் போது கடைசி வரைக்கும் தேவன் உங்களோடிருப்பார். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது சதாகாலத்தின் தேவன். ஜீவனுள்ள காலமெல்லாம் நீங்கள் என் வாழ்க்கையை பொறுப்பேற்றுக் கொண்டமைக்காக ஸ்தோத்திரம். நீங்கள் எல்லாவற்றிலும் என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." (யோசுவா 1:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 08
செவ்வாய்

# உங்கள் வாழ்க்கையை பரிசுத்தமாக்கி வாழ்வில் அற்புதங்களைக் காணுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள் அதி: 15 – 16

**"யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்."** (யோசுவா 3:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் அருமையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.*** இன்றைய நாளில் இந்த தேவ செய்தியை வாசிக்கின்ற நீங்கள் அனைவரும் ***ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.*** ஏனென்றால் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ***ஆச்சரியமானவைகளை*** காணும்படியாக உங்கள் தேவன் உங்களோடு இன்றைய நாளில் பேசப் போகின்றார்.

தேவ பிள்ளைகளே! பிரதான வேத வசனமானது யோசுவா ***இஸ்ரவேல் ஜனங்களுக்கு வெளிப்படுத்திய*** காரியமாகும். அந்த ***தேவ வசனத்தில்*** கூறப்பட்டுள்ளது என்னவெனின் நாளைய நாளில் தேவன் உங்கள் நடுவில் ***அற்புதங்களைச்*** செய்யப் போவதனால் உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள், என்று யோசுவா ஜனங்களுக்கு கூறியதையேயாகும். ஆனாலும் இன்று உங்களுக்கு இந்த வசனம் பொருந்துமா என ***நீங்கள் யோசிக்கின்றீர்களா?*** உங்கள் தேவன் ***இஸ்ரவேலின் தேவன்.*** சேனைகளின் "கர்த்தர் இந்த பூமியின் மீதெங்கும் தேவன்" என்று வாழ்த்தப்படுகின்றார். தேவன் ***பரிசுத்த*** தேவனாகையால் உலகில் எல்லா ஜாதிகளின் மத்தியில் அவரின் ஜனங்களாகுவதற்கு ***தேர்ந்தெடுக்கப்பட்ட*** அனைவரும் ***பரிசுத்தமாக*** வாழ வேண்டும் என்பது ***மிகவும் ஆணித்தரமாகக்*** கூறப்பட்டுள்ளது. ஆகையால் தேவன் எங்களை ***பரிசுத்தத்திற்கு*** அழைத்துக் கொண்டமையால் நாங்கள் எப்பொழுதும் எங்கள் வாழ்வை ***பரிசுத்தமாக*** வைத்துக் கொள்ள வேண்டும்.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் ***வெளியான பரிசுத்தத்தைக்*** குறித்தல்ல எங்கள் ***அந்தரங்கமான வாழ்வின் பரிசுத்தத்தைக்*** குறித்தே வெளிப்படுத்தப்படுகின்றது. ஆகையால் எங்கள் ***உள்ளத்தையும், சிந்தனையையும்*** எல்லா வேளையிலும் நாங்கள் ***பரிசுத்தமாக*** வைத்துக் கொள்ள வேண்டும். ***விஷேடமாக பிரதான தேவ வசனத்தில்*** குறிப்பிடப்படுகின்றதாவது தேவன் உங்கள் ***நடுவில் அற்புதங்களைச்*** செய்யப் போகின்றமையால் ***பரிசுத்தமாயிருங்கள்*** என்றாகும் உங்கள் வாழ்க்கையில் இருக்கின்ற ***பிரச்சினை, கஷ்டங்கள், துன்பங்கள்,*** இவைகளைக் குறித்து ***ஆராய்ந்து பார்த்து நீங்கள் தேவனுக்கு விரோதமாகச்*** செய்கின்ற எல்லாச் செய்கைகளையும் தேவனுக்கு முன்பாகச் சொல்லி ***மனந்திரும்புதலுக்காக ஜெபியுங்கள்.*** மீண்டும் அந்த ***பாவங்களைச்*** செய்யாதபடி தேவனை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். ***மன்னிப்புப் பெற்று பரிசுத்தப்படுங்கள்.*** அப்பொழுது அற்புதங்களை நீங்கள் காணலாம். ***இன்று வெற்றிகரமான நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் பரிசுத்தமான தேவன். நீங்கள் என்னை உங்கள் சொந்த பிள்ளையாக்கிக் கொண்டீர்கள். எனக்கு பரிசுத்தமாய் ஜீவித்து உங்கள் அற்புத செய்கைகளை வாழ்வில் அநுபவிக்க கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

**"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது." (யாத்திராகமம் 19:5)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் **09**
புதன்

## அதிகாலையில் எம்மைத் தமது கிருபையால் திருப்தியாக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 17 – 18

**"நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்."**
(சங்கீதம் 90:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளும் நலமிகு நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் அதிகாலையிலேயே விழித்து உங்கள் இன்றைய நாள் **கடமைகளை** ஆரம்பிக்கும் முன்னதாக **தேவனின் பாதத்தில் அமர்ந்து ஜெபித்தீர்களா?** என்று நான் உங்களிடம் கேட்கிறேன். ஏனென்றால் **அதிகாலையிலேயே** நாள் ஆரம்பிக்கும் முன்னரே உங்களை உருவாக்கிய **தேவனின் திருப்பாதத்தில் அமர்ந்து** இன்றைய நாளையும் உங்களது அனைத்து காரணங்களையும் **ஒப்புவித்து ஜெபித்தீர்களாயின் உங்களுக்கு சுப நாள்** என்பதை நான் நன்கறிவேன்.

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 34:10**இல் **சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது** என்று எழுதப்பட்டுள்ளது ஆனாலும் நீங்கள் மனிதர்களின் **தயவு, துணை, உதவி** ஆகியவைகளை நாடிச் சென்றீர்களாயின் **இறுதியில் "ஐயோ கோபித்துக் கொள்ளாதீர்கள்."** உங்களுக்கு உதவி செய்ய வழியில்லையே என்று கூறலாம். ஆனால் உங்கள் பிதாவாகிய தேவன் உங்களுக்கு அப்படிச் செய்ய மாட்டார். தேவன் உங்களுக்கு அன்பு செய்கின்ற, உங்களுக்கு இரக்கங் காட்டுகின்ற மிகவும் நல்ல தேவனாக இருக்கின்றார். **30 வருட எனது ஆத்மீக வாழ்க்கையில் ஒரு நாளாவது தேவன் என்னை மறந்ததுமில்லை, கைவிடவும் இல்லை** அடிக்கடி என்னுடைய சொந்த வாழ்க்கையில் பலவிதமான **சவால்கள், தடைகள், பிரச்சினை, துன்பங்கள்** ஏற்பட்டன. ஆனாலும் நான் தேவனை நோக்கி ஜெபிக்கின்ற வேளைகளில் தேவன் எனக்கு **பதில்** கொடுத்து அனைத்திலுமிருந்து என்னை **மீட்டுக் கொண்டார். விஷேடமாக** நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதென்னவெனில் **அதிகாலையிலேயே என்னுடைய தேவனின் முகத்தைத் தேடுவதை என் வாழ்வில் வழக்கமாக மேற் கொண்டு வருவதானால்** எல்லாக் காரியங்களிலும் தேவன் என்னை மீட்டுக் கொள்கிறார்.

தேவ பிள்ளைகளே! அப்படியாக நான் **அதிகாலையிலே** ஜெபிப்பதை வழக்கமாகி இருப்பதே எனக்கு பெரிய ஆசீர்வாதமாக இருக்கின்றதென்பதை நான் மிகவும் **சந்தோஷத்துடன்** தெரிவிக்கின்றேன். அதிகாலை ஜெபத்தில் தேவன் என்னோடு பேசி என்னை **ஆறுதல்படுத்திய** வேளைகளோ அநேகமாயிருக்கின்றன. பகல் ஏதாகிலும் பிரச்சினைகள் ஏற்பட்டு **வேதனைப்படுகையில்,** அதற்கடுத்த நாள் **அதிகாலையில் தேவனுடைய பாதத்திலிருக்கும் போது தேவன் தமது இரக்கத்தினால் என்னை நிறைத்து ஆறுதல்படுத்துவார்.** அவருடைய அன்பினால் என்னை நிரப்புவார். நீங்களும் அதிகாலையிலேயே அவரது முகத்தைத் தேடி வெற்றியை **பெற்றுக் கொள்ளுங்கள். "வெற்றிகரமான நாள்!"**

**ஜெபம்**

எங்கள் தேவனே! காலையிலேயே உங்கள் முகத்தைத் தேடுபவர்க்கு உங்கள் இரக்கம் பெரியது. தேவனே இன்று முதல் எல்லாத் தினங்களிலும் காலையில் உங்கள் முகத்தைத் தேடுபவர்களை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

**"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை."**
(புலம்பல் 3:22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 10
வியாழன்

# உபத்திரவ அலைகளின் போது நம் வாழ்க்கை படகில் இயேசு இருக்கின்றார்!

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள் அதி: 19 – 20

**"அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்றுசொல்லி, பயத்தினால் அலறினார்கள்."** (பரி.மத்தேயு 14:26)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** மனிதர்களாகிய எங்கள் வாழ்க்கையில் அடிக்கடி நன்மையான காரியங்களைப் போன்று எங்களைத் **வேதனைப்படுத்தக் கூடிய துக்கத்தில் ஆழ்த்துகின்ற,** காரியங்களும் நடைபெறுகின்றன. **ஆத்மீக** பிள்ளைகளான நாங்கள் இவற்றைக் குறித்து நினைத்து **குழப்பமடையவோ** உள்ளத்தை **அதைரியப்படுத்திக்கொள்ளத்** தேவையில்லை. ஏனென்றால் சில வேளைகளில் எங்களை **ஆத்மீகமாக தைரியப்படுத்தவும்,** எங்கள் **விசுவாசத்தை** வளர்ப்பதற்கும் இப்படியான காரியங்களை தேவன் எங்கள் வாழ்வில் **அனுமதிக்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! ஒரு நாள் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அக்கரைக்கு போகும்படி **துரிதப்படுத்தி** படகில் அனுப்பி விட்டு **தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறி சாயங்காலமான போது தனிமையாயிருந்தார்.** அதற்குள்ளாகப் **படகு நடுக்கடலிலே** அலைகளினால் **அலைக்கழிக்கப்பட்டுக்** கொண்டிருந்தது. இயேசுவானவர் அவர்களோடு இல்லாதபடியால் அவர்கள் **பயத்திற்குள்ளாக்கியிருந்தார்கள்.** சீஷர்கள் இப்படியாக இருக்கின்ற வேளையில் இதை **ஆவியில்** உணர்ந்த இயேசுகிறிஸ்து கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார். அலைகளின் **சீற்றத்தினால்** மிகவும் **பயந்திருந்த** சீஷர்கள் இயேசு என்று அறியாத போது அவர்களை நோக்கி அவ் வேளையில் வந்தது ஆவியொன்று என்று இன்னும் பயந்து **அலறினாகள்.** உடனே இயேசு **திடன் கொள்ளுங்கள்** என்றார் **பேதுரு** அவரை நோக்கி ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக்கட்டளையிடும் என்றார்

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து **"வா"** என்றவுடன் பேதுரு **படகை** விட்டிறங்கி இயேசுவிடம் போக ஜலத்தின் மேல் நடந்தார். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு **பயந்து அமிழ்ந்து** போகையில் ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். இந்த **மூன்று நிகழ்வுகளும் சீஷர்கள் மிகவும் கலக்கமடைந்த** போது **நிகழ்ந்தவைகள்.** இயேசு பேதுருவின் கையைப் பிடித்த பின்பு **படகில்** ஏறிய போது காற்று அமர்ந்தது பெரிதானதொரு **சமாதானம்** சீஷர்களுக்கு கிடைத்தது தேவனோடு போகின்ற **ஆத்மீக** பயணத்தில் **உபத்திரவங்கள்** வரும் போது நீங்கள் **பயப்படாதிருங்கள்.** தேவன் உங்களுக்கு அற்புதம் செய்வார். நமது வாழ்க்கை **படகில்** இயேசு எப்போதும் எம்மோடிருக்கிறார். **"இன்று வெற்றிகரமான நாள்."**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் அற்புதமான தேவன் உங்களைப் போன்று அதிசயம் செய்வார் உலகில் யாருமில்லை இன்றும் நீங்கள் என் உபத்திரவங்களில் என்னை அற்புதம் காணச் செய்யும் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்." (சங்கீதம் 103:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 11
வெள்ளி

## எமது மீது இருக்கும் கோபத்தை அகற்றி நம்மை தேற்றுகின்ற தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 21 – 22

**"அக்காலத்திலே நீ சொல்வது: கர்த்தாவே, நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என்மேல் கோபமாயிருந்தீர்; ஆனாலும் உம்முடைய கோபம் நீங்கிற்று; நீர் என்னைத் தேற்றுகிறீர்."** (ஏசாயா 12:1)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ***இனிதான நாளைப் பெற்று மகிழ்வுடன் வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.*** மனிதனுக்கு சரீரப் பிரகாரமாக ஏற்படுகின்ற நோய்களுக்கு பரிகாரம் பெற்றுக் கொள்வதற்கு ***வைத்தியசாலைகள்*** அநேகங்கமுண்டு. ஆனாலும் மனிதனது ஆத்துமாவானது நோய்வாய்ப்படும்போது அதற்கு பரிகாரம் செய்வதற்கு முடிந்தவர் ஒருவருமில்லை ஆனாலும் நீங்கள் ***கலங்காதீர்கள்.*** ஏனென்றால் உங்கள் ஆத்துமாவைக் குறித்து ***பாரத்தோடு*** தேவன் அதிகமாக உங்களைத் தேடுவதனால் உங்களோடு இருப்பாராக!

தேவ பிள்ளைகளே! உங்களை தேவன் தெரிந்துக் கொண்டதும், நீங்கள் தேவனின் சொந்த பிள்ளைகளாயிருப்பதும் நீங்கள் பெற்ற உன்னத ***அதிர்ஷ்டமாகும்.*** நீங்கள் ***முழு உள்ளத்தோடு*** தேவன் பேரில் ***விசுவாசங்*** கொண்டு அவரின் மகனாக இயேசுகிறிஸ்துவின் மூலமாக ***ஆசீர்வாதம்*** பெற்றுக் கொள்வது உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பெற்ற பெரிய வெற்றியாகும். நீங்கள் ***எதிர்நோக்குகின்ற*** பலவிதமான பிரச்சினைகள், ***உபத்திரவங்கள், நோய்கள், வேதனைகள்*** காரணமாக உங்கள் உள்ளம் குழப்பமடைய இடங் கொடுக்காதீர்கள் நீங்கள் முகங் கொடுக்க வேண்டிய மிகச் சிறிய ***பிரச்சினையாக*** இருப்பினும், மகா விசாலமான மலையைப் போன்ற பிரச்சினையாகக் காட்டி உங்கள் உள்ளத்தில் உங்கள் வாழ்க்கையைக் குறித்து, எதிர்காலத்தைப் பற்றி ***அவசியமற்ற*** பயத்தை உண்டாக்குவதற்கு ***சாத்தான்*** முயற்சி செய்வான். நீங்கள் அதற்கு ***இடங் கொடுக்காது*** அவனுக்கு ***விரோதமாக எதிர்த்து நில்லுங்கள்.*** உதாரணமாக பனம் மரத்திற்கடியில் நித்திரைக் கொண்டிருந்த முயலொன்று பனங்காய் கீழே விழுந்த போது, ***பூமியதிர்ச்சி*** என்று நினைத்து மிக சிறியதொன்றிற்கு ***கலவரப்பட்டு*** போனது போல நீங்கள் கிரியை செய்யாதிருங்கள்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் முதன் முதலாக ***தேவ சமுகத்தில் முழங்காலிருந்து ஜெபியுங்கள்.*** உங்கள் ***சிந்தனைகளை,*** உள்ளத்தை ***அர்ப்பணித்து*** தேவனின் தேவ ஆவியானவரின் வழிநடத்தலுக்கு ***கீழ்படியுங்கள்.*** உங்கள் ***கீழ்ப்படியாமையை*** அகற்றி உங்கள் ***மனதை குழப்புகின்ற*** உங்கள் பிரச்சினைகள் ஒவ்வொன்றாகக் கூறி தேவனிடம் ***கூறி ஜெபியுங்கள்.*** தேவன் உங்களை அதிகமாக நேசிக்கின்றபடியல் கோபத்தை அகற்றி இன்றைய நாளில் உங்களுக்கு ***ஆறுதலளிக்க*** வல்லவராயிருக்கின்றார் உங்களுக்கு ***இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை ஆறுதல் படுத்தும் தேவன் நான் உங்களுக்கு கீழ்படியாத போது என் மீது நீர் கோபம் கொள்கின்றீர். எங்கள் மேல் கோபத்தை அகற்றி இன்றைய நாளிலும் எங்களுக்கு ஆறுதலளியும்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

**"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்." (ஏசாயா 66:13)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 12
சனி

உங்கள் வாழ்க்கையில் புதிதான காரியங்களையும், அற்புதங்களையும் நடத்துகின்ற தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள் அதி: 23 – 24

"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்."
(ஏசாயா 43:19)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் **இன்றைய நாளில் காணப்படுகின்ற எல்லா சவால்களையும் எதிர் கொண்டு வெற்றி பெறும் நாளாகட்டும்** என **வாழ்த்துகிறேன்.** ஏனென்றால் "**யெகோவா நிசி**" வெற்றியைத் தரும் தேவன் இன்றும் எங்களோடு இருக்கின்றார். **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகம **சிங்கள மொழிப் பெயர்ப்பில்** இந்த வசனமானது **வித்தியாசப்பட்டிருப்பதைக்** காணலாம். அங்கு கூறப்படுகிறதாவது **பாலை வனத்திலும்** கூட **வழிகளையும், காடுகளில் ஆறுகளையும் உண்டாக்குவேன் என்றாகும்.** ஆனாலும் தமிழ் மொழியிலும் **ஆங்கில மொழியிலும் மொழி** பெயர்ப்புக்கும் போது மேலே குறிப்பிட்டுள்ளவாறு எழுதப்பட்டுள்ளது இன்றைய நாளில் தேவன் **இவ்வசனத்திற்கூடாக** எம்மோடு பேசுகின்றார். பாலைவனத்தில் எந்த விதமான தடைகளுமின்றி **அவ்விடத்திற்கும்** பயணிக்க முடியும், அங்கே பாதைகள் அவசியமில்லை என்பதும் ஆனால் **வனாந்தரத்தில்** நீங்கள் **திக்கற்றவர்களாவீர்கள்** என்றால் அங்கே வழிகளைத் தேடிக் கொள்ள முடியாமற் போகும் போது தனித்து **ஆதரவற்றவர்களாவது உண்மை.** அப்படியே **காடுகளில்** அநேக **ஆறுகள்** இயற்கையாகவே அமைந்துள்ளன. பாலை வனத்தில் அப்படியல்லாது அங்கு **தண்ணீர் ஒரு சொட்டு கூட** தேடிக் கொள்ள முடியாது.

தேவ பிள்ளைகளே! **பாலைவனத்தைப்** போன்ற **வறண்ட, வெடிப்புக்கள்** இருக்கின்ற உங்கள் வாழ்க்கைக்கு **குளிரான தண்ணீர் பெருகி** வருகின்ற **ஆறுகளை** உருவாக்குவதற்கும், வாழ்க்கையில் நீங்கள் **பயணிக்க** வேண்டிய சரியான திசையை கண்டு பிடிக்க முடியாமல் **ஆதரவற்று அநாதையாக** இருக்கின்ற உங்களுக்கு புதிய பாதையை உருவாக்கித் தருவதற்கும் தேவன் உங்களோடிருக்கிறார். நீங்கள் **பயப்பட வேண்டாம்.** ஆகையால் உங்கள் வாழ்க்கையில் காணப்படும் **துக்கம், வேதனைகள்** அனைத்தும் இன்றும் உங்கள் வாழ்க்கையில் நிர்மூலமாகி **புதிதானவைகளை** இதுவரை நிகழாத நல் நிகழ்வுகளை தேவன் நடத்துவார். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் சிருஷ்டிப்பின் தேவன். நான் உங்களைக் குறித்து முழு உள்ளத்தோடு விசுவாசித்து என்னுடைய வாழ்க்கையை உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். இன்று வேத வசனத்தை போன்று கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழி நடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்." (எரேமியா 31:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 13
ஞாயிறு

## பரிசுத்தவான்களுக்கு செவி கொடுக்கும் நீதியின் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 25 – 26

**"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது."**
(சங்கீதம் 34:15)

அன்பார்ந்த என் **தேவ பிள்ளைகளே! சதாகாலங்களில் ஜீவனுள்ளவராய் கிரியை செய்கிற இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றைய தினம் மனமகிழ்ச்சியுடன் கூடிய நல்ல நாளாக அமையுமாறு வாழ்த்துகிறேன்.** மானிடராக இவ்வுலகில் நாம் **அவதரித்தது மகா பாக்கியம்.** இப் **பாக்கியம்** கிடைப்பது ஒரே ஒரு முறை மாத்திரமே என **வேத வசனம் கூறுகிறது.** ஆகையால் எமக்கு **வாய்ந்த** இந்த மானிட வாழ்வை நாங்கள் **மிக கருத்துடன் வாழ வேண்டும்** அதிலும் எம் வாழ்வில் இயேசுகிறிஸ்துவை **விசுவாசித்து** அறிந்து அவரை ஏற்றுக் கொண்டவர்களாய் இருப்போமாகில் எம் வாழ்க்கையின் **பெறுமதியை** எழுத்தில் எழுத முடியாது.

தேவ பிள்ளைகளே! எம் **தாயகத்தில் இரண்டு கோடிக்கு** மேற்பட்ட ஜனங்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பூமியில் மனிதர்களாக பிறந்து ஜீவிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் **மத்தியில்** மிகச் **சொற்பமானவர்களே** இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இதில் நீங்களும், நானும் பங்கு கொண்டிருப்பது எமது **அதிரஷ்டமே!** இப் பூமியில் பாவிகளாய் **ஜீவித்த** எம்மை பரமபிதா தனது ஏக புத்திரன் இயேசுகிறிஸ்துவின் அண்டைக்கு அழைத்து அவருடைய சரீரத்திலிருந்து **வடிந்தோடிய பரிசுத்த** இரத்தத்தால் எங்கள் பாவங்கள் நீங்கும்படியாக கழுவி எம்மை **பரிசுத்தவான்களாக** மாற்றினார். நானும் நீங்களும் **பரிசுத்தவான்களாக** மாறிய போதிலும் எமக்கும் **உலகத்தில் உபத்திரவம்** உண்டு என சத்திய வசனம் வெளிப்படுத்துகிறது. நான் நீதிமானாயிருந்தால் ஏன் எனக்கு இந்த **உபத்திரவங்கள்** என நினைக்கிறீர்களா? **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் **மனித உருவில் வாழ்ந்த நாட்கள் முப்பத்தி மூன்றரை வருடங்கள்.** அவர் இப் பூமியில் **அவதரித்தது** மனிதர்களின் பாவ சாபங்களை நீக்கி அவருடைய **சுவிகாரப் புத்திரர்களாய்** எம்மை மாற்றி **நித்திய ஜீவனைப்** பெற்றுக் கொடுத்து பரலோகப் பிதாவின் **சித்தத்தை நிறைவேற்றும்படியாகவே பரம பிதாவின்** திருசித்தத்தை நிறைவேற்றும்படியாய் இயேசுகிறிஸ்து அநேக **பாடுகளை அனுபவித்தார்.**

தேவ பிள்ளைகளே! நீங்களும் பரலோப் பிதாவின் **விருப்பத்தின்படி** அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்தமாக, நல்லபடியாய் வாழும்படியாக **உற்சாகத்துடன்** முயற்சிகளை மேற் கொள்ளும் வேளைகளில் உங்கள் **எதிராளியாகிய சாத்தான் அநேக பாதிப்புகளை, உபத்திரவங்களை உண்டு** பண்ணுவான். ஆயினும் **நீங்கள் பயப்படாதீர்கள். உங்கள் குரலுக்கு செவிகொடுக்கும்,** விண்ணப்பங்களுக்கு **பதில் அளிக்கும் நீதியின் தேவன் உங்களோடிருக்கிறார். இன்று ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

பரலோகத் தகப்பனே! என்னை நீதிமானாக மாற்றினவரே! இன்றும் உங்கள் விருப்பத்தின்படி ஜீவிக்கும்படியாக மேற் கொள்ளும் சகல முயற்சிகளிலும் தேவரீர் தாமே, எனக்கு ஒத்தாசை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

**"...நீ அழுதுகொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்." (ஏசாயா 30:19)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 14 திங்கள்

# சிருஷ்டிகரும் ராஜாவுமானவர் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 27 – 28

**"நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும், இஸ்ரவேலின் சிருஷ்டிகரும், உங்கள் ராஜாவுமானவர்."** (ஏசாயா 43:15)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! எம்மை உருவாக்கினவரும், பரிசுத்த பாதையில் வழிநடத்துகிறவருமான ஜீவிக்கின்ற தேவன் **இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையில்லா நாமத்தினால் இந் நல்ல நாளிலே மகிழ்ந்திருக்கும்படியாய் ஆசீர்வதிக்கிறேன்.** இம் மண்ணுலகிலே பெரும்பாலானோர்கைவிடப்பட்டவர்களாயும், ***துயரப்படுபவர்களாயும், பரிதாபத்துக்குரியவர்களாய்*** வாழ்கிறார்கள். இவர்களிடம் நாம் ***விசாரித்தறிந்தால் பெற்றோர், பிள்ளைகள் கணவன், மனைவி*** இப்படியான ***உறவுகளின் பிரிவால்*** இப்படியான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கிறதைக் தெரிந்துக் கொள்ளலம். ***கைவிடப்பட்டவர்களாய், தனிமைப்பட்டவர்களாயும், துன்பம் அனுபவிப்பவர்களாயும்*** உலகில் வாழ்கிறார்கள்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ***தனிமைப்பட்டவராயினும் துயரப்படினும், கலங்காதிருங்கள்!*** உங்கள் தாயினும், தகப்பனிலும் மேலாய் உங்களை நேசிக்கும் ஆண்டவர் உங்களோடிருக்கிறார். அவர் உங்களை உருவாக்கின தேவன். உங்களை தாயின் கர்ப்பத்தில் ***சிருஷ்டித்தவர் தாயின் கர்ப்பப்பையில்*** உருவாகும் முன்னர் அந்தக் **கருவைக்** கண்ட உங்களைத் தெரிந்துக் கொண்டவர். என **சத்திய வசனம்** வெளிப்படுத்துகிறது. ஆகையால் உங்கள் தாயும், தகப்பனும் உங்களை மறந்தாலும் தேவனோ உங்களை **ஒரு போதும் மறக்கமட்டார்.** ஆகையால் நாங்கள் பேறு பெற்றவர்கள் இன்றைய தினம் தேவன் கூறும் வாத்தைகள் **ஏசாயா 43:15** இல் நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும் **இஸ்ரவேலின் சிருஷ்டிகரும்** உங்கள் ராஜாவுமானார் என்பதாகும் இதில் ***விஷேசித்த*** வார்த்தை கர்த்தர் உங்கள் ராஜா என்பதே அவர் ராஜாவாக இருந்தால் எம்மை நமது ***அடிமைகளாகவோ, சேவகர்களாகவே நியமித்திருக்களாம்.*** ஆனால் அவர் எம்மை ***சொந்த பிள்ளைகளாக*** மாற்றிக் கொண்டார். அவரது சொந்த பிள்ளைகளாக மாற்றிக் கொண்டார் அவரது ஏகபுத்திரன் இயேசுகிறிஸ்துவுக் கூடாக எம்மை ராஜ புத்திரர்களாக மாற்றினார்.

பிரியமானவர்களே! நீங்கள் எத்தைகைய ***அதிரஷ்டசாலி*** என்றும் உங்கள் அவர் தம் சொந்த பிள்ளையாக மாற்றிக் கொண்படியால் உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை ***நினைத்துப்*** பாருங்கள் அவர் உங்களை அதிகமாக ***நேசிக்கிறபடியால் சதாகாலங்களிலும்*** உங்களோடு இருந்து உங்களை ஆசீர்வதிக்கிறார். ***இன்றைய நாள் ஆசீர்வாதத்தின் நாள்!***

ஜெபம்

*என் தேவனே! என் அருமையான இயேசுகிறிஸ்துவே உங்கள் உன்னத அன்பினால் என்னை உங்கள் பிள்ளையாக மாற்றினவரே ஸ்தோத்திரம் நீங்கள் ராஜாவாக இருந்தும் எம்மை அடிமைகளாக நடத்தாமல் உங்கள் சொந்த பிள்ளைகளாக மாற்றி அன்பு செலுத்தி ஆசீர்வதிக்கிறபடியால் உங்களை நன்றியோடு துதிக்கிறேன். ~ஆமென்~*

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்." (சகரியா 14:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 15
செவ்வாய்

## நீதியின் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நீதிமொழிகள்
அதி: 29 – 30

**“என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான்.”** (பரி:மத்தேயு 20:15)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! அன்பான தேவ பிள்ளைகளே! தேவனுடைய மகா பெரிதான கிருபை **இன்றைய தினத்திலும் உங்கள் வாழ்க்கையில் பொழிந்தருளும்படியாக ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆசீர்வதிக்கிறேன்.** எங்கள் வானகத்து தகப்பன் மிகவும் நீதிமானாயிருக்கிறார் அவர் நீதியின் தேவன். ஆதலால் அவர் சகலரையும் ஒரே விதமாகவே நேசிக்கிறார். அன்பு செய்கிறார். அவருடைய **சொந்தப் பிள்ளைகளாக** உலகத்தோர் மத்தியிலிருந்து **வேறுபிரிக்கப்பட்டவர்களாகிய** நாங்கள் **அதிர்ஷ்டசாலிகள்.**

தேவ பிள்ளைகளே! இச் செய்தியின் தலைப்பு வசனமாக எழுதியுள்ள வார்த்தைகள் இயேசுகிறிஸ்துவால் தமது **அப்போஸ்தலருக்கு** பரலோக இராஜ்ஜியத்தைக் குறித்து **தெளிவுப்படுத்தும்படியாக** கூறப்பட்ட உவமானத்தின் சில வாத்தைகளாகும். ஒரு திராட்சை தோட்ட **எஜமான் தன் திராட்சை தோட்டத்திலே** வேலை செய்யும்படியாக **அதிகாலையில்** ஒரு பணம் கூலி பேசி ஒரு சிலரை வேலைக்கு தோட்டத்திற்கு அனுப்பினார். மறுபடியும், **ஆறாம், ஒன்பதாம், பதினோராம்** மணி வேளைகளிலும் ஆட்களை அனுப்பினான். சாயங்காலம் **திராட்சை தோட்டத்து எஜமான் சகலருக்கும் ஒரு பணம் என்ற கூலி பேசியபடி கொடுக்க கட்டளையிட்டான்.** ஆனால் அதிகாலையில் வேளைக்கு வந்தவர்கள் **எஜமானுக்கு விரோதமாக** பிந்திவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள். **பகலின் கஷ்டத்தையும், வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த** எங்களுக்கு இவர்களை **சமமாக்கினீரே** என்று **முறுமுறுத்தார்கள்.**

அன்பார்ந்தவர்களே! அதற்கு தோட்டத்து எஜமானின் **பதில்** சிநேகிதனே நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை, நீ என்னிடத்தில் ஒரு பணத்திற்கு **சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ.** உனக்கு கொடுத்தது போலப் **பிந்தி வந்தவனாகிய** இவனுக்கும் கொடுப்பது **என்னுடைய இஷ்டம்** என்றான். முதல் மணி நேரம் முதல் கடைசி மணி வேளையில் வந்தவர்கள் யாவருக்கும் ஒரே விதமாக சலுகை செய்த எஜமான் நல்லம் உள்ளம் வய்ந்தவனாக இருந்தான். அதே போல் எமது ஆண்டவரும் தம்மை அண்டி வந்தவர்களுக்கு **சகாயம் புரியும் உத்தமமான உள்ளம் உடையவராக இருக்கிறார். முந்தினோர், பிந்தினோர்,** அனைவருக்கும் ஒரே விதமாக **நியாயம் தீர்க்கும் நீதியின் தேவன் உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். இன்று வெற்றிச் சிறந்த நல்நாள்!**

ஜெபம்

என் அன்பரே! உங்கள் இருதயம் பரிசுத்தமானது நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டபடியால் நீங்கள் யாவருமே அதிர்ஷ்டசாலிகள். அந்த பாக்கியத்தைப் பெறும்படியாக என்னையும் அழைத்தவரே நன்றி ஐயா உங்கள் நீதியின் வலக்கரம் எம்மை வழிநடத்துகிறபடியால் நன்றி இயேசுவே! இயேசுகிறிஸதுவின் நாமத்தினால். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

**“கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது.”**
**(சங்கீதம் 145:9)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 16

புதன்

## தேவனுக்குப் பிரியமானவர்கள் !

இன்றைய வேதவாசிப்பு

நீதிமொழிகள் 31

பிரசங்கி 01

**"தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்."**

(பரி.மத்தேயு 27:43)

அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! ***ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் இன்றைய தினம், மனமகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன்.*** எம்மைப் **படைத்த** தேவனின் ஒரே குமாரன், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ***விசுவாசித்து*** பின்பற்றுகிறவர்கள் அனைவரும் ***அதிர்ஷ்டசாலிகளும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாகும். ஆகையால் நீங்களும் அதிர்ஷ்டசாலியே!***

தேவனுடையவர்களே! இப் பூமியின் இறுதிக் காலங்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் எமக்கு ***உலகரீதியில்*** அநேக ***உபத்திரவங்கள்*** நேரிடும் என்பது ***உண்மையே.*** ஏனெனில் ***சத்திய வசனங்களின்*** வெளிப்பாடுகள் இதுவே உலகத்தின் முடிவு ***அண்மிக்கும்*** போது உபத்திரவங்கள் பெருகும் என்பதாகவும் இதன் மூலம் ஆவிக்குரிய பிள்ளைகளுடைய வாழ்க்கையில் ***விசுவாசம், நம்பிக்கை, எதிர்பார்ப்புகள் அன்பு*** போன்றவற்றைச் ***சாத்தான்*** சூறையாடி வாழ்க்கைகளை ***சீர்கேடடையச்*** செய்ய அநேக ***உபாயங்களை*** மேற் கொள்வான் என வேதம் கூறுகிறது. தற்போதே உங்கள் ஜீவியத்தில் சாத்தானுடைய ***சோதனைகள், சவால்கள், உபத்திரவங்களுக்கு முகங் கொடுத்து வேதனை அநுபவிப்பராகவும் உள்ளம் உடைந்த*** நிலையில் இருக்கிறீர்களா? நான் தேவனுடைய பிள்ளையாக இருந்தும் நான் ***அதிர்ஷ்டசாலியாக*** இல்லையே? நான் ***அதிர்ஷ்டசாலியாக*** இருப்பின் எனக்கு ஏன் இத்தகைய வேதனைகள் என நினைத்து ***அதைரியமடையாதீர்கள்.*** ஏனெனில் உங்கள் ***உபத்திரவத்தின்*** நாட்கள் **சொற்ப நாட்களே.** அதி சீக்கிரமாகவே உபத்திரவங்கள் நீங்கிப் போகும். சகலவிதமான **இன்னல்களையும், இடையூறுகளையும்** நீண்ட காலங்களுக்கு அனுபவிக்க வேண்டிய ***அவசியமில்லை.***

அன்புக்குரியவர்களே! இன்றைய செய்தியின் தலைப்பில் கொடுக்கப்பட்ட வேதவசனம், எமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து ***ஆணிகளால் அறையப்பட்டவராய் சிலுவை மரத்திலே*** **தொங்கின வேளையில்** மனிதர்கள் அவரைக் ***கேலி செய்து அவமானப்படுத்தி நிந்திக்கும்படியாய்*** பேசின **வார்த்தைகளாகும்.** அவர் இவ்வண்ணமாக ***நிந்திக்கப்பட்டதும் அவமானப்பட்டதும்*** அவர் இவைகளைத் தாங்கிக் கொண்டதும் எமக்காகவே. நீங்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியால் மனிதர்கள் மத்தியில் நிந்தைக்கும், **வெறுப்புக்கும்** ஆளாகி ***வெட்கப்படுகிறீர்களா?*** அப்படியானால் நீங்கள் தேவன் விரும்பும் தேவப்பிள்ளை. மரித்த மூன்றாம் தினத்திலே ***மகா மகிமையுடன் மரணத்தை ஜெயம் கொண்டவராய்*** உயிருடன் எழுந்த இயேசுகிறிஸ்துவை ***விசுவாசிக்கும்*** உங்களை ***உயர்த்தவும், நிலைநிறுத்தவும் அவர்*** வல்லமையுள்ளவராயிருக்கிறார். ***ஜெயம் தரும் நாள்!***

ஜெபம்

என் தேவனே! என்னை மீட்டுக் கொண்ட என் பரலோகப் பிதாவே! உங்கள் புத்திர சுவீகாரப் பிள்ளையாக என்னை மாற்றினவரே! உங்களுக்கு பிரியமுள்ள தேவ பிள்ளையாக ஜெயங் கொண்டு ஜீவிக்க என்னை வழிநடத்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்." (கலாத்தியர் 4:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 17
வியாழன்

பெரிய வியாழக்கிழமை

எங்களுக்கு
கீழ்ப்படிதலைக்
கற்பிக்கும் தேவன் !

இன்றைய
வேதவாசிப்பு

பிரசங்கி
அதி: 02 – 03

"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்." (பரி.யோவான் 13:5)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! உங்களுக்கு தேவன் கொடுத்ததான **இந்நாள் நல்மிகு நன்மையான** நாளாகும்படியாக **வாழ்த்துகின்றேன்.** முழு உலகத்திலும் உங்களையும், என்னையும் தான் சொந்த ஜனங்களாக, தெரிந்துக் கொண்ட **தேவ பிதாவின் அன்பு எப்படியானது?** என்று நிறுத்துப் பார்க்க முடியொதென்பது நீங்கள் நன்றாக அறிந்துக் கொண்டதொன்றாகும். தேவனது தெய்வீக அன்பின் காரணமாக நாங்கள் செய்த **பாவங்களை மன்னிக்கவும்,** எங்களை **பாவத்திலிருந்து** மீட்கும்படியாகவும் தேவன் குமாரனை உலகிற்கு அனுப்பினார். நாளைய நாளில் நீங்களும் நானும் மிக **துக்ககரமாக பெரிய வெள்ளிக்கிழமையை நினைவுக் கூறப் போகின்றோம்.** ஆனாலும் தேவ பிள்ளைகளே! அதற்கு முன்தினம் இயேசுகிறிஸ்து தன் சீஷர்களுடன் இருந்ததையும், தனது **சீஷர்களின் பாதங்களைக் கழுவியதையும்** பிரதான வேதாகம வசனத்தில் வாசிக்கின்றீர்கள்.

தேவ பிள்ளைகளே! இவ்வுலகத்தைப் படைத்த பரலோகத்தின் அதிபதி, ஒரே பேறான மகனாக உலகததிற்கு வந்து தான் தேர்ந்தெடுத்த சீஷர்களின் பாதங்களை கழுவும் அளவுக்கு கீழ்படிதலை கொண்டிருந்தார். அதுமாத்திரமல்ல தனது சீஷர்கள் **பரிசுத்தமாக** இருக்க வேண்டுமென்பதையே பிரியமாகக் கொண்டிருந்தார். அப்படியே தேவனின் நற்செய்தியை கொண்டு செல்கின்ற அவர்களது **பாதங்களைக் கழுவவும் தேவன் ஆயத்தமானார்** அப்படியான பாதங்களில் உள்ளதான **பாவங்கள் என்னும் தூசிகளை ஒரு பாத்திரத்திலேயே சேர்த்தார்.** ஆனாலும் எங்களுக்கு சதாகாலமும் பரிசுத்தமாக இருப்பதற்கு **வல்லமை** உடையது அவருடைய இரத்தம் ஒன்றேயாகும். ஆகையால் அவர் இவைகள் அனைத்தையும் முடித்து தன்னுடைய **ஜீவனை பலியாகக்** கொடுத்தார்.

தேவ பிள்ளைகளே! அப்படி தேவன் கீழப்படிந்து வாழ்ந்த போதும் நன்மையான பலன்கள் கிடைக்கவில்லை. ***சீஷர்கள் 12 பேருக்குள் ஒருவனான யூதாஸ் என்னும் சீஷன் 30 வெள்ளிக்காசுக்காக தேவனைக் காட்டிக் கொடுத்தான்*** பேதுரு எனும் ***சீஷன் சேவல் கூவும் முன்னதாக மூன்று முறை தேவனை மறுதலித்தான். கெத்சமனே*** எனும் இடத்தில் இயேசுவை யூதர்கள் பிடித்துக் கொண்டு போகையில் சீஷர்கள் அனைவரும் தங்களுடைய உயிருக்கு ஆபத்து நேரிடும் என்ற பயத்தில் இயேசுவை விட்டு ***அகன்று போய் விட்டார்கள். மூன்று வருடக் காலமாக இயேசுவோடு ஒன்றாக வாழ்ந்த சீஷர்களுக்கு இயேசுவே தேவ குமாரன் என்பதை அறிந்து கொள்ள முடியாமற் போய் விட்டது.*** நாங்கள் எங்கள் வாழ்க்கையில் அப்படிச் செய்யாமல் தேவனையே சார்ந்துக் கொள்வோம். நாங்களும் தேவனின் முன்னிலையில் கீழ்ப்படிந்து தேவனின் நாமத்தை **உயர்த்தி கௌவரப்படுத்துவோம்.** அப்பொழுது இயேசுகிறிஸ்து இன்றைய நாளிலும் எம்மை **ஆசீர்வதிப்பார். "இன்று வெற்றிகரமான நாள்!"**

ஜெபம்

என் தேவனே! மூன்று வருடங்களாக சீஷர்களோடிருந்தும் உங்கள் குமாரன் யார் என்று அறிந்து கொள்ளவில்லை. ஆனாலும் நற்செய்தி கொண்டு போகின்ற எனது பாதங்களைக் கழுவுவதற்கும் தேவன் கீழ்ப்படிகின்றார் என்பதை நான் அறிவேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (பரி:யோவான் 13:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 18
வெள்ளி

பெரிய வெள்ளி

# எங்களுக்காக சிலுவையில் பலியான இயேசுகிறிஸ்து

இன்றைய வேதவாசிப்பு
பிரசங்கி
அதி: 04 – 05

**"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்."** (யோவான் 3:17)

அன்புமிகுந்த தேவ பிள்ளைகளே! ***இன்றைய நாள் இயேசுகிறிஸ்துவானவர் எங்களுக்காக தமது வாழ்க்கையை பலியாகக் கொடுத்த துக்ககரமான நாளாகும்.*** இன்றைய நாளிலும் எமது இயேசுகிறிஸ்துவின் தியாகத்தைக் குறித்து எடுத்துரைக்க வேண்டுமென நன் ***எதிர்பார்க்கிறேன்.*** தேவ பிள்ளைகளே! இன்று ***பெரிய வெள்ளிக்கிழமையென*** பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. ***இயேசுகிறிஸ்து*** எங்களுக்காக ***சிலுவையில் பலியாகி*** மரித்த நாளான இன்று தேவனின் ***எல்லையில்லா அன்பை நினைவு*** கூறும் முகமாக சம்பிரதாய செய்கைகள் நடைபெறினும் அது பிழையில்லை என நினைக்கிறேன். ஆனாலும் அதிகமான கிறிஸ்தவர்கள் தேவனாகிய நம் இயேசுகிறிஸ்து ***எங்கள் பாவங்கள் நிமித்தமாக ஜீவனை அர்ப்பணித்து மூன்றாம் நாள் வெற்றியோடு மரித்தோர்க்கிடையில் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கின்றவராக*** எங்களோடு ஜீவிக்கின்றார் என்ற கருத்தினைக் கொண்டிருப்பதால் மீண்டுமாக நாங்கள் அந்த ***துக்ககரமான*** நாளை நினைவுப்படுத்தி எங்களை ***வேதனைக்குட்படுத்திக்*** கொள்ள தேவையில்லை என்ற கருத்தினை தெரிவிக்கின்றர்கள். அதிலும் ***உண்மையிருக்கின்றது*** என்று எனக்குத் தெரிகிறது.

தேவ பிள்ளைகளே! பாவத்தில் நிறைந்து ***இருதய சமாதானமின்றி,*** ஜீவிக்க வேண்டிய காரணத்தினாலே ஜீவித்த எமக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்து தெரிந்து கொள்ள கிடைத்தமையே தேவனுக்குக் கிட்டி நெருங்கி வந்த பின்பு எங்கள் வாழ்வு முற்றாக மாறி ***பாவங்கள் கழுவப்பட்டு*** அகன்றிட சமாதானம் நிறைந்த ***சந்தோஷமான*** ஜீவியத்தில் புதிய ***எதிர்ப்பார்ப்புகளோடு*** வெற்றிகரமாக வாழ்கிறோம். இயேசுகிறிஸ்துவின் அருகிலேயே கிட்டிச் சேர்ந்ததன் பிறகு எமது வாழ்க்கை இவ்வண்ணமாக மாறியதன் காரணம் தேவன் எமது பாவங்கள் நிமித்தமாக சிலுவையில் பலியாகி பரிசுத்த வேதாகமத்தில் **1 யோவான் 1:7இல்** ***எழுதப்பட்டுள்ளபடி*** அதாவது இயேசுகிறிஸ்துவின் ***இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி*** நம்மைச் ***சுத்திகரிக்கும்*** ஆகையால் அவர் தம்மீது காட்டுகின்ற ***அதி உன்னதமான அன்பை நினைப்பதோடு*** அவரின் ***சிலுவை பாடுகளையும், வேதனைகளையும் தியாகத்தையும் நினைவு கூருவோமாக!***

தேவன் எமக்கு காட்டிய அளவு கடந்த ***அன்பின்*** காரணமாக பரலோகப் பிதாவின் விருப்பத்தோடும் மிகவும் ***கொடூரமாக சிலுவையில் பலியாகினார்.*** இயேசு ***அநுபவித்த தண்டனைக்கு*** மேலான ஒரு தண்டனையும் இல்லை. அப்படியான ஒரு ***கொடூரமான மரணத்தின்*** மூலமாக அவரின் இரத்தத்தினால் நம் ***பாவங்கள் கழுவப்பெற்று பரிசுத்தர்களாக வாழ்கிறோம்.*** நாம் இயேசுவின் உள்ளத்தை வேதனைப்படுத்தாது முழு உள்ளத்துடன், முழு பெலத்துடன் தேவனை நேசிப்போம். ***இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! உங்கள் ஒரே பேறான குமாரனுக்காக ஸ்தோத்திரம் எனக்காக இவ்வுலகிற்கு அனுப்பியபடியல் நன்றி கூறுகின்றேன். நீங்கள் என் மேல் கொண்டிருந்த அளவு கடந்த அன்புக்காக ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

**"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (பரி:யோவான் 13:17)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 19

சனி

## இருதயங்களை நெகிழச் செய்யும் இயேசுவின் அன்பு !

இன்றைய வேதவாசிப்பு

பிரசங்கி அதி: 06 – 07

**"யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான்."** (மத்தேயு 27:59-60)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! உலக ***மாந்தரை மீட்கும்படியாய்*** மண்ணில் அவரித்து தேவகுமாரன் எமக்களித்த இரட்சிப்பின் ***சலாக்கியத்திற்காய்*** நன்றியுடன் அவரை பணிந்து துதிப்போம். அவருடைய கோரப் ***பாடுகளையும்*** சிலுவை மரணத்தையும் தியானித்து, ஆத்தமாவிலே ***வியாகுலமடைந்வர்களே!*** தேவனுடைய அளவிட முடியாத **பேரன்பினால்** எமக்களித்த இரட்சிப்பு, எமக்கு நிததிய ஜீவனைக் கொடுத்து எம்மை அவரது பிள்ளைகளாக்கியது என்பதை அறிந்து அவரை **நேசிக்கிறவர்களாய்** மாறுவோம். இன்றைய தினம் இயேசுகிறிஸ்துவின் திருச் சரீரம் ***தூயதான*** மெல்லிய துப்பட்டியிலே சுற்றி புதிய கல்லறையிலே அடக்கம் செய்யப்பட்ட தினத்தை ***நினைவு கூர்ந்து தியானிக்கிற*** தேவ பிள்ளைகளே! நீங்கள் ***பாக்கியவான்கள்*** இப்பிரஞ்சம் முழுவதும் அந்தகாரப்பட்டு ***ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியிருந்த*** நாள் இயேசுவை சார்ந்தவர்கள் வேதனையிலும் பயத்திலும் முடங்கி கிடந்த நாள். இவைகள் நிறைவேறி ஆண்டுகள் 2014 கடந்தாலும் அதை இன்றைய தினத்திலும் ***சிந்தியாதிருப்பது எப்படி?*** இன்று அவர் எமக்காய் ஜீவனை ஈந்தபடியால் நாம் ஜீவனுள்ளவாகளாய் இருக்கிறோம்.

தேவ பிள்ளைகளே! இயேசுவின் ***அன்பு*** அளவில்லாதது இப் பூமியில் மனிதனாகப் பிறந்தால் அவர் அநுபவிக்கப் போகும் வேதனைகள் ***கோர மரணம்*** இவைகளை அறிந்தவராய் இருந்தும் மானிடர்களை ஆத்துமா அழிவிலிருந்து காத்து நித்திய ஜீவனை அளிக்கும்படியாய் ***அன்பின் நிமித்தமாய் பரத்திலிருந்து*** இறங்கினார். ***பாடுபட்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.*** அவரின் கடைசி துளி இரத்தமும் மனிதாகளுக்காய் சிந்தப்பட்டது. ***தமது சீக்ஷர்கள மூவருடன் கெத்சமனே என்ற பூங்காவில் ஜெபிக்கும்படி சென்றார். பூங்காவில் தனிமையாக தன் பரலோக பிதாவை நோக்கி ஜெபிக்கும் போது தாம் படப் போகும் பாடுகளை எண்ணி வியாகுலமடைந்து அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்.*** அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளியாய்த் தரையிலே விழுந்தது என வேத வாத்தைகள் வெளிப்படுத்துகிறது.

தேவ பிள்ளைகளே! எம் மீது அவர் கொண்ட அன்பின் நிமித்தமாக தம் ***சரீரத்தில் ஏற்பட்ட வேதனை, காயங்கள் யாவற்றையும் சகித்தார்.*** எமக்காக ஜீவனுள்ளவராய் உயிருடன் காணப்படும்படியாய் அவர் சரீரம் ***கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு வாசலில் பெரிய கல்லால் காவல் வைக்கப்பட்டது*** எம் பாவ சாபங்களை நீக்கி எம்மை ***நித்திய ஜீவனுக்குரிய பரிசுத்த பாதையில்*** நடத்திச் செல்லும்படியாய் அவர் கொடுத்த **விலைக்கிரயம்** மதிப்பிட முடியாதது அவரின் அளவில்லா அன்பு இன்றும் மாறாததயிருக்கிறது. இன்றும் அவர் உங்களை நேசிக்கிறார். ***வெற்றி சிறந்த நல் நாள்!***

**ஜெபம்**

தேவ சித்தத்தை! நிறை வெற்றும்படியாய் பரமண்டத்திலிருந்து இறங்கி வந்த பரிசுத்த தெய்வமே! எம இரட்சகராய் பலியாக்கப்பட்டு எமக்கு ஜீவனை கொடுத்த உங்கள் அளவில்லா அன்புக்காய் உங்களை ஸ்தோத்தரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீவ மன்னா**
ஏப்ரல் **20**
ஞாயிறு

## மரணத்தை வென்ற இயேசுவே எமது வாழ்விலும் வெற்றியைத் தருகின்றார் !

**இன்றைய வேதவாசிப்பு**
பிரசங்கி
அதி: 08 – 09

**"ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது."** (மத்தேயு 24:5-6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இன்றைய **அருமையான ஈஸ்டர் ஞாயிறு நாளுக்காக ஸ்தோத்தரிக்கிறேன். மரணத்தை வென்று நம் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாகும்.** நாம் இவ்வுலகில் பாவத்தில வீழ்ந்து **சந்தோஷங்களை** இழந்த எமது வாழ்க்கையானது யாருக்குமே **பிரயோசனமற்று** போகாதபடி எம்மை மீட்பதற்காக குழந்தை வடிவில் **அவதரித்து தன் வாலிப வயதில் தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்து** என்னையும் உங்களையும் தேவனின் **சொந்த பிள்ளைகளாகத்** தெரிந்தெடுத்து வேறுபடுத்திக் கொண்டபடியால் நாம் அனைவருமே **அதிர்ஷ்டசாலிகள்** ஆவோம்.

தேவ பிள்ளைகளே! வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே நாங்கள் ஆயத்தம் பண்ணின **கந்தவர்க்கங்களை** அவர்கள் எடுத்துக் கொண்டு வேறு சில ஸ்திரிகளோடுங்கூடக் **கல்லறையினிடத்தில்** வந்தார்கள். ஆனால் ஒரு போதும் நடக்காத ஒரு நிகழ்வைக் கண்டு அவர்கள் கலக்கமடைந்தார்கள் என வேதாகமத்தில் **மத்தேயு 24ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது.** பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டு பேர் கேட்ட கேள்வியே மேற் கூறப்பட்டுள்ள வசனமாகும். அத்தோடு இயேசு சீஷர்களோடு வாழ்ந்த போது **மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும் சிலுவையில் அறையப்படவும் மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும், வேண்டுமென்பதாக.** அவர் கலிலேயாவில் இருந்த போது கூறினார். அதை அவர்கள் மறுத்து விட்டார்கள். **கல்லறைக்குச்** சென்ற அனைவரும் சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் **அவர் உயிர்த்தெழுந்தார் என அறிவித்தார்.**

நாம் இன்று உயிர்த்தெழுந்து ஜீவிக்கின்ற இயேசுவுடன் இவ் வாழ்க்கையில் பயணிக்கிறோம். ஆகையால் உயிரோடிருக்கிற நம் தேவனைக் குறித்து இன்னும் **அநேக ஜனங்களுக்கு** சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். **சாத்தானை மேற் கொள்ள சகல அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறார்.** இயேசு இவ்வுலகில் பிறந்தது முதல் **இயேசுவை ஒழிக்கத் திட்டமிட்ட சாத்தானானவன்** இயேசு உயிர்த்தெழுவார் என நினைக்கவில்லை. மீண்டுமாக **அவர் உயிர்த்தெழுந்து எமக்கு பரிசுத்த ஆவியானவரைக்** கொடுத்து பரலோகம் சென்ற அவர் இன்றும் பரிசுத்த ஆவியினால் **எம்மை பெலப்படுத்தி** வரங்களினால் நிரப்பி வருகின்றார். எமது வாழ்க்கை அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுகின்றது. இயேசுகிறிஸ்துவின் **வசனங்களுக்கூடாக** நாம நம் வாழ்க்கையை **பரிசுத்தப் படுத்திக்கொள்கிறோம்.** பழைய வாழ்வினின்று எம்மை மாற்றி **புதிதான வாழ்க்கைப் பாதையில்** செல்ல அவரது வசனமே போதுமானது. இன்றைய நாளில் இயேசுகிறிஸ்துவுக்குள் உங்கள் **வாழ்வை மாற்றி சமாதானத்துடன் ஜீவியுங்கள். இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

எனது அருமையானத் தகப்பனே! உங்கள் குமாரன் மரணத்தை வென்று எமக்கும் வெறறி வாழ்வைக் கொடுத்ததால் நாம் பயமின்றி வாழ்கின்றோம். உங்கள் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலோடு நடந்து செல்ல எனக்கு பெலன் தாருங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்." (2 கொரிந்தியர் 15:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 21 திங்கள்

## உங்களுக்காக தன் ஜீவனை கொடுத்தவர்!

இன்றைய வேதவாசிப்பு
பிரசங்கி அதி: 10 – 11

"இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்."
(பரி.மத்தேயு 27:50)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கிறவரான கிருபையின் **தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தால் இன்றும் சுபநாளாக அமையுமாறு வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** தங்கள் வாழ்க்கை சகல சௌகரியங்கள் கொண்டதாக அமைய வேண்டும் என்பதே ஒவ்வொருவருடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. தம் வாழ்வில் **இடறல்கள், சஞ்சலங்கள், பிரச்சினைகள், வேதனைகள்** வருவதை யாரும் விரும்புவதில்லை. ஆயினும் நாம் **விரும்பாத** அநேக காரியங்கள் எம் வாழ்வில் நடைபெறுகிறது. ஆகையால் **துக்கத்துடன் வேதனையுடன்** வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது.

தேவ பிள்ளைகளே! இதைக் குறித்து **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவை அறிந்து அவரை முழு **இருதயத்தோடு** விசுவாசிக்கிறவர்களாயும் அவரை ஏற்றுக் கொண்ட எம் வாழ்வில் அவருடைய பிள்ளைகளாக நாம் உத்தமமாக ஜீவிக்கிறவர்களானபடியால் தம் **சொந்த பிள்ளைகளின்** வாழ்வில் **இன்னல்கள், துன்பங்கள்** ஏற்பட்டு வாழ்க்கை சீர்கேடடைய ஒரு போதும் இடமளிக்கமாட்டார் அவர் எம் இருதயத்தின் **விருப்பங்களை** நிறைவேற்றும், **ஆசீர்வதிக்கும்** எம் பரம பிதாவானவர். இன்றைய இச் செய்தியின் தலைப்பின் வசனம் அவர் எமக்காகவே சிலுவை மரத்தில் **ஆவியை விட்டார்.** என கூறுகிறது. எம்மைப் **படைத்த தெய்வம்** தாமே மனுஷ குமாரனாக இப் பூமியில் **அவதரித்து** எமக்காக **சிலுவையிலே** தம்மையே **ஜீவ பலியாக** ஒப்புக் கொடுத்து எம்மை மீட்டார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான், நானே அதை கொடுக்கிறேன், அதை கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு என இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

தேவனுடையவர்களே! உங்களுக்காக தம் **ஜீவனை கொடுக்கும்** அளவிற்கு அவர் உங்களை நேசித்தார். அவர் உங்களிடம் **எதிர்பார்ப்பதும்** உங்கள் மகிழ்ச்சியையும், உங்கள் அன்பையும் மாத்திரமே. இன்றும் அவர் உங்களை அதிகமாய் நேசிக்கிறார். **என்ன துன்பங்கள், தொல்லைகள், தோல்விகள்** வந்தாலும் இவைகளை **எண்ணி சோர்வடையாதபடி** உங்களுக்காக தம் **உயிரைக்** கொடுத்த இயேசு அப்பாவின் அளவில்லா அன்பை **எண்ணிப்பாருங்கள்.** உங்கள் **இருதயத்தை** அவர் அன்பில் நிரப்பி அவரை நெருங்கிச் சேருங்கள். உங்களினிமித்தம் **தம் உயிரை ஈந்தவர்** உங்கள் **துக்கங்களையெல்லாம்** மாற்றிடுவார். உங்கள் மீது மிக **கரிசனையுடன்** செயல்படுவார். **இன்றைய நாள் ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் மீது மிகவும் அன்புக் கொண்ட தகப்பனே! எனக்கு நித்திய ஜீவனை நியமித்தவரே! என் இடறல்களில் என்னோடிருந்து விடுவித்து மகிழ்ச்சியை தருபவரே! நான் உங்களை அதிகதிகமாய் நேசிக்க கிருபை தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."
(பரி.யோவான் 3:16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் **22**
செவ்வாய்

## துன்பத்தின் காலங்களுக்கு சமனாக சந்தோஷத்தின் காலங்கள்!

இன்றைய வேதவாசிப்பு
பிரசங்கி 12
உன்னதப்பாட்டு 01

**"தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்."** (சங்கீதம் 90:15)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! கனப் பெழுதும் எம்மைக் கைவிடாதவரும் இமைப்பொழுதும் எம்மை மறக்காதவருமான ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் மகிமையான நாமத்தால் **இன்றைய தினத்தில் தேவ பிள்ளையாகிய உங்களை** வாழ்த்துகிறேன். இவ்வுலகில் ஜீவிக்கின்ற சகல மனிதர்களுடைய வாழ்விலும் **நன்மையும், தீமையும்** மாறி மாறி வந்து போய்க் கொண்டேயிருக்கும் என்பது நாம் காண்கின்ற செயலாகும். ஆனால் சிலருடைய வாழ்விலே **துன்பமோ, தீமையான** காரியங்களோ தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். **மாறி மாறி** தங்கள் வாழ்வில் ஏற்படும் **தீமைகளினால்** கடைசி காலம் வரை ஆயுள் முடியும் வரை **வேதனை** அனுபவிப்பவர்களாகவே இருப்பது எமக்கு தெரியும்.

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருக்கட்டும்!** இலங்கை ஜனத்தொகை இரண்டு கோடியே மூன்று இலட்சம் மாந்தர்கள் மத்தியில் நீங்கள் **ஆசீர்வாதமானவர்கள்** ஏனெனில் இன்றைய தினத்தில் இந்த வார்த்தைகள் கொண்ட செய்திக்கூடாய் உங்களை சந்திக்கும் உங்களை படைத்தவரும் பரலோக தகப்பனும் உங்களை தமது **சொந்த பிள்ளையாக மாற்றிக் கொண்டவருமான** தேவன் உங்களோடிருக்கிறார். ஆகையால் அவர் உங்களுக்கு **நன்மையானவைகளையே** செய்வார். **சங்கீதம் 90:15**இல் இதையே வெளிப்படுத்துகிறது. நீங்கள் **துன்பத்தைக்** கண்ட வருஷங்களுக்கு சரியாய் உங்களை மகிழ்ச்சியாக்குவார் என்பதாக. **தைரியமாயிருங்கள்!** நீங்கள் தேவ பிள்ளையாய் இருந்த போதும் உங்கள் **பலவீனத்தினால் துன்பங்கள், பிரச்சினைகளினால் வேதனைப்படுகிறீர்களா?** நீங்கள் **மனங்கசந்து** அழுது அவர் சமுகத்தில் **ஜெபித்து** ஆண்டவரே, நான் உங்கள் பிள்ளையாக இருந்த போதிலும் என் பலவீனத்தின் நிமித்தமாக இவ்வளவு நாட்களாக **துன்பத்தினால் கஷ்டப்படுகிறேன்.** இதை அறிகிற ஆண்டவர் நீங்கள் இந்த **சிறுமை** என்னை விட்டு **விலகும்படியாய்** என்னை மகிழ்ச்சியாக்கும், என்னை ஆறுதல் படுத்தியருளுமாறு **ஜெபிக்கிறேன்** என வேண்டிக் கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு **ஆறுதலைத்** தருவார்.

அன்பார்ந்தவர்களே! நீங்கள் யாராவது இவ்வண்ணம் அநேக காலங்கள் **துன்பத்தின்** பாதையில் நடந்துக் கொண்டிருந்தால் வரும் நாட்களில் உங்கள் வாழ்வில் மகிழ்ச்சியை பெறப் போகிறேன் என **முழு உள்ளத்தோடு விசுவாசியுங்கள். ஆவிக்குரிய** பின்மாற்றத்திலிருந்து மறுபடியும் **புதுபெலனடையும்படியாக அதைரியத்தை விட்டு விட்டு தேவ பாதத்தில் அமர்ந்து உங்கள் இருதயத்தை அவர் சமுகத்தில் ஊற்றி ஜெபியுங்கள்.** உங்கள் **கண்ணீரை காண்பவர்.** உங்கள் வாழ்வில் **சிறுமை, துன்பம், கண்ணீர்,** யாவற்றையும் மாற்றி மகிழ்ச்சியை **அருளுவார்.** நீங்கள் அவரிடம் கேட்டால் நீங்கள் கடந்து வந்த துன்பத்தின் காலத்திற்கு சரியாய் வரும் நாட்களில் சந்தோஷத்தைக் கொடுப்பார். அவர் யாவற்றையும் செய்ய வல்ல தேவனானவர். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

பரலோகத் தகப்பனே! துக்கத்தை சந்தோஷமாக மாற்றுபவரே! என் இருதயத்தை உங்கள் சமுகத்தில் ஊற்றுகிறேன். என் வாழ்வில் துன்பத்தை நீக்கி மகிழ்ச்சியாக்கி என் வாழ்வின் சந்தோஷத்தையும், ஆறுதலையும் தந்து ஆசீர்வதிக்குமாறு ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்." (எரேமியா 31:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 23
புதன்

# ஆறுதலான தேவ வார்த்தைகளைக் கொண்டு பதிலளிக்கும் ஆண்டவர் !

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம்
அதி: 02 – 03

**"அப்பொழுது கர்த்தர், என்னோடே பேசின தூதனுக்கு நல்வார்த்தைகளையும் ஆறுதலான வார்த்தைகளையும் பிரதியுத்தரமாகச் சொன்னார்."** (சகரியா 1:13)

அன்பார்ந்த பாசமிக்க என் தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசு கிறிஸ்துவின் கிருபை இந்தப் புதிய நாளின்** உதய வேளையில் தம்மைத் தேடும் தமது பிள்ளைகளின் மீது பனியைப்போல் வானிலிருந்து இறங்கச் செய்து **தேவ ஆசீர்வாதத்தை பெறும்படியாக அநுக்கிரகம் செய்யும் தேவனை ஸ்தோத்தரிப்போம்.** இப் பூமியில் வாழும் மனிதர்களை நோக்கிப் பார்த்தால் **ஒரு சிலரே பணக்காரர்களாய் சகலவசதிகளும் செல்வாக்கும்** கொண்ட **பிரமுகர்களாய்** இருக்கிறார்கள். ஆனால் சகலரையும் படைத்தவர் ஒரே கர்த்தராகவே இருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! **பணம் படைத்தவர்கள்** வாழ்விலும் **மனவேதனைகள்** ஏற்படத்தான் செய்கிறது. அவர்கள் எவ்வளவு பணத்தை செலவழித்த போதிலும் **மனவேதனை துன்பத்தை** மாற்ற முடியாத சந்தர்ப்பம் ஏற்படக்கூடும். ஏனெனில் வசதி படைத்தவர்கள் வாழ்க்கையில் தனிமைப்பட்டு, **கைவிடப்பட்டவர்களாய்** இருப்பதை நாம் **கேள்விப்படுகிறோம்.** ஆயினும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** சகல மனிதர்களுக்கும் **சந்தோஷம், சமாதானம், ஆறுதல்** தரக் கூடிய ஒரே தெய்வம் எம்மைப் படைத்த பரலோகத்தின் தேவன் இயேசுகிறிஸ்து மாத்திரமே. நீங்கள் தேவ பிள்ளையாயினும் **பணப்பற்றாக்குறை, வருமானக் குறைவு, பணத் தேவைகள்** ஏற்படும் போது இதை எப்படி **சமாளிப்பது** என **புலம்பாதீர்கள்.** உங்கள் தேவனால் உங்களை **ஆசீர்வதிக்க** அநேக காலங்கள் போகாது. கர்த்தரின் **ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும்.**

ஆயினும் தேவ பிள்ளைகளே! உங்கள் **ஐசுவரியத்தை** குறித்து அல்ல, உங்கள் வாழ்விற்கு சமாதானத்தை, **ஆறுதலை** தரவல்ல ஒரே தேவன் இயேசுகிறிஸ்து மாத்திரமே என உங்கள் **சிந்தையில்** கொண்டு இன்னும் அதிகமாய் அவரை **நெருங்கி** வாழும்படியாக முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். அவர் உங்களிடம் **எதிர்பார்க்கும் காரியம்,** அவர் விரும்புவது என்ன என தேடிப்பார்த்து அவைகளை நிறைவேற்றி அவர் **நேசிக்கும், பாராட்டும்** தேவனுடைய பிள்ளையாக வாழுங்கள் எமது செய்தியின் பிரதான தேவ வார்த்தை கூறுவது போல் **தூதனுக்கு நல்வார்த்தைகளையும் ஆறுதலான வார்த்தைகளையும்** பிரதியுத்தரமாகச் சொன்னார். அதேபோல் உங்கள் ஆண்டவர் அவருடைய சொந்த பிள்ளைகளாகிய உங்களுக்கு ஆறுதலான வார்த்தைக்களுக்கூடாக **பதில் தராதிருப்பாரா?** ஆகவே **ஆறுதலையும் ஜெயத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.** இன்றைய **நாள் ஆறுதல் தரும் சிறந்த நாள்!**

ஜெபம்

அன்பான தேவனே! நான் ஏழையாக இருப்பினும் நீங்கள் என்னோடு இருப்பதால், அநேக ஆசீர்வாதங்கள் எனக்கு உரிமையாக இருக்கிறது. என் துன்பவேளையில் என்னை உங்கள் வார்த்தைகளால் தேற்றி வழி நடத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப்போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும்." (ஏசாயா 30:26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 24 வியாழன்

பயத்தை நீக்கி தைரியத்தை தருபவர் !

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம்
அதி: 04 – 05

"...உக்கிரக்கோபத்தினிமித்தம் உன் இருதயம் துவளவேண்டாம். கர்த்தராகிய ஆண்டவர்: அந்த ஆலோசனை நிலைநிற்பதில்லை, அதின்படி சம்பவிப்பதுமில்லை;" (ஏசாயா 7:6,7)

அருமையான என் தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தினால் இன்றும் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் சுபநாளாகும்படி வாழ்த்துகிறேன். இன்றைய தினம் என்ன கிழமையாகினும் மற்றைய கிழமை நாட்களைப் போல் **இன்றும் குறைவில்லை தேவ ஆசீர்வாதம்** உங்கள் சகலரையும் வந்தடையும்படி **பிரார்த்திக்கின்றேன்.** தேவன் எமக்களித்திருக்கும் **பரிசுத்த ஓய்வு நாளை** தவிர்ந்த சகல கிழமை நாட்களிலும் நாம் **கையிட்டுச்** செய்யும் சகல **காரியங்களையும்** எமது ஆண்டவர் **ஆசீர்வதித்திருக்கிறார்.** ஆனால் **பரிசுத்த ஓய்வு நாளன்று நாம் அவருக்கு முதலிடம் கொடுத்து** அவருடைய **தேவ சமுகத்தில் அமர்ந்திருப்பதைக் காண்பதே அவரின் எதிர்பார்ப்பு.**

தேவ பிள்ளைகளே! இச் செய்தியின் தலைப்பில் காணும் வேத வசனம் **ஏசாயா 7:6,7** வெளிப்படுத்தும் சம்பவத்தைக் குறித்து **தியானிப்போம்.** ஆகாஸ் என்னும் யூத தேசத்து **ராஜாவின்** நாட்களில் ***சீரியாவின்*** ராஜாவும், இஸ்ரவேலின் ராஜாவும் எப்பிராயீமைச் சார்ந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு **கலங்கிய** வேளையில் **யூதாவுக்கு விரோதமாகப்** போய் அதை பங்கிட்டுக் கொள்ளும்படியாய் **துராலோசனை** செய்கிறார்கள் என **தாவீதின் குடும்பத்தாருக்கு** அறிவிக்கப்பட்ட போது **ராஜாவின் இருதயமும்,** அவன் ஜனத்தின் இருதயமும் காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறது போல் அசைந்தது. இரண்டு ராஜாக்களும் அவர்களின் **இரண்டு பெரும் படைகளும் வந்துக் கொண்டிருக்கிறது** என அறிந்தவுடன் ராஜாவும் அவன் படையும் பயமடைந்தனர். அந்நேரத்தில் கர்த்தர் **தீர்க்கதரிசியான ஏசாயாவை** அழைத்து அவர் மூலமாய் **ஆகாஸ் ராஜாவிற்கு** அனுப்பிய செய்தியின் சிறுபகுதியே இது. உனக்கு விரோதமாக துராலோசனை பண்ணின **உக்கிரகக் கோபத்தினிமித்தம்** உன் இருதயம் **துவள வேண்டாம்,** கர்த்தராகிய ஆண்டவர் அந்த ஆலோசனை **நிலைநிற்பதில்லை** அதின்படி **சம்பவிப்பதுமில்லை** என கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

தேவனுடையவர்களே! ஆண்டவர் **ஆகாஸ் ராஜாவை** மாத்திரமல்ல என்னையும் உங்களையும் நேசிக்கிறார். நாங்கள் அவருடைய **சொந்தப் பிள்ளைகளாக** இருக்கிறபடியால் அவருடைய நினைவுகள் எம்மை சூழ்ந்திருக்கிறபடியால் எம் வாழ்வில் ஏற்படும் எந்த **பிரச்சினையைக்** குறித்தும் **பயப்படாது, உங்கள் பிரச்சினைகள் அக்கினியைப் போல் மேலே எழும்பி தோன்றினாலும் பயப்படாதீர்கள்.** உங்களை அழைத்தவர் இன்றும் ஜீவிக்கிறார். அவரைக் குறித்து **முழு உள்ளத்தோடு விசுவாசித்து, சாத்தானை** குறித்ததான **பயத்தை** வாழ்க்கையிலிருந்து நீக்கி போடுங்கள். **உங்களுக்கு வெற்றி சிறந்த நாள்!**

ஜெபம்

என்னுடைய தகப்பனே! என்னை பயமடையச் செய்யும்படி கிரியை செய்யும் சாத்தானை என் உள்ளத்தை குழப்பமடையச் செய்யும் அவனது செயல்களையும் நீக்கி என் விசுவாசத்தை பெருகச் செய்யுங்கள். என் பயத்தை நீங்கச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்." (ஏசாயா 41:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 25
வெள்ளி

# நுகத்தடியை முறித்துப்போடும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம்
அதி: 06 - 07

**"அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர்."**
(ஏசாயா 9:4)

பாசமிக்க என் தேவ பிள்ளைகளே! **கட்டுக்களை முறிக்கிறவரும் காயங்களை கட்டுகிறவரும்,** ஜீவனுள்ளவரும், **பலத்த காரியங்களை** செய்கிறவருமான இயேசுகிறிஸ்துவின் **சர்வவல்லமையுள்ள** நாமத்தினால் இன்றைய தினத்தில் உங்கள் வாழ்க்கையில் காணப்படும் சகல **நுகத்தடிகளும் முறிக்கப்படும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** மனிதர்களின் வாழ்க்கையில் வெளியரங்க கிரியைகளை எம்மால் காணக்கூடும். ஆனால் அவனுடைய **உள்ளார்ந்த** தனிப்பட்ட வாழ்வில் காணப்படும் **வேதனைகள், கஷ்டங்கள், பிரச்சினைகள்** போன்ற அநேக **நுகத்தடிகளை** எம்மால் காண முடியாதபடி **இருதயங்களில்** அடங்கியிருக்கிறது. ஆயினும் இன்றைய தின இச் செய்தியின் மூலம் தேவன் உங்களோடு பேசுகிறார்.

தேவ பிள்ளைகளே! **பாரமான பொதிகளை சுமந்து** செல்லும்படியாக மாடுகளை இணைத்து செய்யப்படும் மாட்டு வண்டிகளை நீங்கள் கண்டிருப்பீர்கள் **நவீனயுகத்தில்** இவைகளின் **பாவனைகள்** குறைவுப்பட்டிருந்த போதிலும் நீங்கள் இம் மாட்டு வண்டிகளைக் கண்டிருப்பீர்கள் என **விசுவாசிக்கிறேன்.** அந்த வண்டியிலுள்ள பொருட்களின் பாரத்தை தாங்கும்படியாக மாடுகள் **நுகத்தடியின்** மூலம் வண்டியோடு இணைத்திருப்பார்கள். அந் **நுகத்தடி** மாடுகளின் தோளில் வைக்கப்பட்டு மாடுகள் **பாரம் சுமந்து** செல்லும்படியாக நடத்தப்படும். மாடுகளுக்கு **அப்பாரம் சுமக்க முடியாவிட்டாலும்** மாடுகளின் விருப்பப்படி செயல்பட முடியாது. அவைகளுக்கு **விடுதலையில்லை.** கயிறுகள் மூலம் அவைகள் வண்டியில் இழுத்துக் கட்டி இணைக்கப்பட்டிருக்கிறது. **உரிமைக்காரன்** விரும்பினால் மாத்திரமே கட்டுகளை தளர்த்தி அவைகளை விடுதலை செய்ய முடியும் இக் காரியத்தைப் பார்த்தால் மாடுகளுக்கு, வண்டிக்கு சொந்தக்காரன் அல்ல வேதனை அனுபவிப்பது. வண்டியில் இணைக்கப்பட்ட மாடுகளே நாள் முழுவதுமாக நுகத்தடியின் அழுத்தத்தினால் வேதனை அனுபவிக்கிறது. இதே போல் அநேக மனிதர்கள் தங்கள் வாழ்வில் எங்களால் **உணர** முடியாத **வேதனைகள், சோதனைகள், கண்ணீர், கவலைகளால் நுகத்தடிகளில் கட்டப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் **இவ்வண்ணம் வேதனை அனுபவிக்கிறீர்களா?** வாழ்வில் முன்னேற்றத்துக்குரிய **பாரத்தை சுமக்க** முடியாது **சோர்வடைந்து வேதனையில் வாழ்கிறீர்களா?** நீங்கள் **ஆவிக்குரிய** பிள்ளையாயினும் உங்கள் **ஆத்மீக வழிப் பயணத்தில்** நடந்து செல்ல முடியாதபடி உங்கள் **இல்லத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள்** இவர்கள் மூலமாய் தடைகள் ஏற்பட்டு உள்ளத்தில் வேதனையில் கட்டப்பட்டு இருக்கிறீர்களா? ஆயினும் **நீங்கள் கலங்காதிருங்கள்!** உங்கள் **படைப்பின்** தேவன் **நுகத்தடிகளை** முறித்துப் போடுவார். **மிலாற்றையும் அளோட்டியின் கோலையும் முறித்துப் போட** வல்லவராயிருக்கிறார். உங்கள் வாழ்க்கையின் தடைகளை அவரிடம் **ஒப்படையுங்கள்** அவர்கள் **கட்டுகளையும் முறித்து** வழி நடத்தும்படியாய் உங்களோடிருக்கிறார். உங்களுக்கு இன்று **ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் தகப்பனே! என் வாழ்க்கையில் காணப்படும் நுகத்தடியை நீங்கள் அறிகிறீர்கள். என் வாழ்க்கைப் பயணத்தை உங்கள் கரத்தில் தருகிறேன் என் வாழ்வில் காணப்படும் நுகங்களை முறித்துப் போடுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்." (ஏசாயா 29:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 26
சனி

**ஆட்டுக்குட்டியானவரின் பரிசுத்த இரத்தம் எம் இரட்சிப்பின் விலைக் கிரயமாக மாறியதே !**

இன்றைய வேதவாசிப்பு
உபாகமம் 08
ஏசாயா 01

**"...அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."** (1 யோவான் 1:7)

அன்பான தேவனுடைய பிள்ளைகளே! **இப் புதிய நாளின் மனரம்மியமான காலைப் பொழுதினிலே தேவனுடைய கிருபாசனத்தில் இருந்து இறங்கி வரும் வரப்பிரசாதம் உங்களை நிரப்பும்படி ஜீவிக்கின்ற தேவன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.** மாம்சத்தின் கிரியைகள் யாவும் வெளியரங்கமாய் எம் கண்களால் காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் **உள்ளத்தின் காரியங்களான ஆத்துமாவின்** கிரியைகளை எம்மால் காண முடியாது. மனிதர்களாகிய எங்கள் **இருதயங்களில் ஏற்படும் துன்பம், மகிழ்ச்சி, ஆனந்தம், வேதனை, பொறாமை, பழிவாங்கும் நினைவு, கோபம்** போன்ற அநேக உணர்வுகளை மற்றவர்களால் அறிந்துக் கொள்ளமுடியாது. **இருதயத்தின் நினைவுகளை** அறிகிறவர் தேவபிதா மாத்திரமே.

தேவ பிள்ளைகளே! எம் **ஆத்துமாவை விசாரித்தறிகிறவரும்** எமது சரீர சுகத்தை குறித்து அக்கறையுடையவரும் எம்மை அதிகமாய் நேசிக்கிறவரும் எம்மை தம் **சொந்த பிள்ளைகளாய்** மாற்றிக் கொண்டவருமான **எம் படைப்பின் தேவனால் நாங்கள் பாக்கியவான்களாக திகழ்கிறோம்.** நாங்கள் பெற்றுக் கொண்டதான இவ் வரப்பிரசாதத்தை உலகியல்பின்படி வாழும் எவராலும், என்ன விலைக்கிரயத்தாலும் பெற்றுக் கொள்ள முடியது. **மனித ஆத்துமாவை இரட்சிப்பதற்கான** விலையை செலுத்தக் கூடியவனாக எவனும் தகுதி உள்ளவனாக இல்லை. மனிதனுடைய ஆத்துமாவில் பாவம் நுழையும் போது அந்த ஆத்துமா **பாவத்தால்** கட்டப்படுகிறது. பாவம் அதிகரிக்க, அதிகரிக்கின்ற ஆத்துமா மரணமடையும், வாழ்க்கை சீர்கெட்டுப் போகும். ஆயினும் **வானத்தையும், பூமியையும்,** யாவற்றையும் உருவாக்கிய தேவனின் ஏக புத்திரன் எம் இரட்சகர் இயேசுகிறிஸ்து உலக மக்கள் அனைவரின் நிமித்தம் **சகல ஆத்துமாக்களையும் பாவத்திலிருந்து மீட்கும் பொருட்டு பாவத்தின் கூலியாக விலைக்கிரயம் செலுத்தி முடித்தார்.** அவரை ஏற்றுக் கொண்ட நாம் **பாவத்திற்கு கூலி செலுத்த அவசியமில்லை.** ஏனெனில் **1யோவான் 1:7** வேத வசனம் **"...அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.**

தேவ பிள்ளைகளே! நாங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதால் அவருடைய மகன் மூலம் எம் **பாவங்கள் கழுவப்பட்டது மாத்திரமல்ல பரத்தின் சகல ஆசீர்வாதங்களும் ஆத்துமாவை நிரப்பும்படி எமக்குச் சொந்தமாக்கினார்.** எம்மை தமது பரிசுத்த இரத்தத்தால் தம்முடையவர்களாக்கி தனது அன்புக்கு பாத்திரவான்களாக மாற்றிய இயேசுகிறிஸ்துவை நெருங்கிச் சேர்ந்துக கொள்வோம். அப்போது சாத்தானின் சகல கட்டுகளும் முறிந்துபோம். **உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் பாவ சாபங்களை நீக்கி என்னையும் பரிசுத்தமாக மாற்றும்படியாய் இப்பாவ பூமியில் அவதரித்தவரே! உங்களை நன்றியுடன் துதிக்கிறேன். உங்கள் இரத்தத்தால் என்னை மீட்டுக் கொண்டதுமின்றி என்னை பாக்கியசாலியாக மாற்றியபடியால் நன்றி.

இயேசு என்ற நாமத்தினால் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

**"ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்."** (பரி.யோவான் 8:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் 27 ஞாயிறு

## நீண்ட கால இக்கட்டுக்களை நீக்கும் தேவ வல்லமை !

இன்றைய வேதவாசிப்பு
ஏசாயா அதி: 02 – 03

"நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்;..." (அப்போஸ்தலர் 3:6-8)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! தேவனுக்குள் கிருபையும் சமாதானமும் பெற்று மகிழ்ந்திருக்கும் தேவ பிள்ளைகளே! **இந்த உதய வேளையில் இன்றைய தினம் உங்களுக்கு ஆசீர்வாதம் நிறைந்த நாளாக அமையுமாறு இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் வாழ்த்துகிறேன்.** மானிடனாய் தாங்க முடியாத **கொடூரமான பாடுகளை, சோதனைகளை சகித்து எமக்காய் ஜீவாதாரபலியாக தம்மை ஒப்புவித்து** எம்மை மீட்டுக் கொண்ட ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாய் இருப்பது **மாபெரும் பாக்கியமே.** மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார் என வேத வாக்கியங்கள் உரைக்கிறது.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவிடம் சுகத்தை பெற்றுக் கொண்டவர்களும் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டவர்களும் இயேசுகிறிஸ்துவை வேண்டாம் என கூறும்போது **அவருடைய இருதயம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும், உள்ளம் எவ்வளவு துக்கப்பட்டிருக்கும்.** பெருந்திரளான ஜனக்கூட்டம் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையுங்கள் என கூக்குரலிடும் போது அந்த வார்த்தைகளின் தொனி அவருடைய செவிகளை தொட்ட போது அவரது உள்ளம் எப்படி **சுக்குநூறாக சிதறியிருக்கும்.** ஆயினும் அவர் எம்மீது அன்புக் கூர்ந்தபடியால் **எம்மை கைவிடாது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து** எம்மை **ஆறுதல்படுத்த** கிரியை செய்கிறவராய் இருக்கிறார். இன்றைய செய்தியின் தலைப்பு வசனம் **தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாகப் பிறந்த ஒரு மனிதனை இயேசுவின் சீஷர்கள் குணமாக்கிய சம்பவத்தையே குறிப்பிடுகின்றது.** தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்திலே **பிச்சை கேட்கும்படியாக சப்பாணியான ஒரு மனிதன் ஆலய வாசலில் விடப்பட்டிருந்தான்.** இயேசுவின் சீஷர்களான தேவாலயத்தில் நுழையும் போது அவர்களிடம் ஏதாவது கிடைக்குமா? என அவர்களை நோக்கிப் பார்த்தவனை **பேதுருவும், யோவானும் வெள்ளியும், பொன்னும்** என்னிடத்திலில்லை, என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட என்று சொல்லி வலது கையினால் அவனைப் **பிடித்துத் தூக்கி விட்டான் என்பதாக அவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! **அவன் அப்பொழுதே குணமாகினான்.** நாற்பது வயதுக்கு மேலாய் தனது வாழ்வில் துன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருந்தவன் விடுதலையைப் பெற்றான். நீங்களும் இயேசு என்னும் நாமத்தைச் சொல்லி விசுவாசத்துடன் **ஜெபிப்பீர்களானால்** இயேசுகிறிஸ்து இன்றைய நாளிலும் **சுகத்தை, விடுதலையை அளிக்க வல்லவராயிருக்கிறார். ஜெபித்து ஜெயத்தை பெறுங்கள். இன்று ஜெயத்தின் நாள்!**



ஜெபம்

என் அன்புத் தகப்பனே! உங்கள் திருக் குமாரன் இயேசுகிறிஸ்துவிற் கூடாக எனக்கு சுகம், ஆறுதல், விடுதலையைப் பெற்றுத் தந்தபடியால் ஸ்தோத்திரம். என் நீண்ட கால வேதனைகளிலிருந்து என்னை விடுவிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது." (சங்கீதம 100:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஏப்ரல் **28**
திங்கள்

**எம் பரிசுத்தமான வாழ்வு தேவனுக்கு உகந்த காணிக்கை யாகும் !**

**இன்றைய வேதவாசிப்பு**
ஏசாயா
அதி: 04 – 05

**"நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்."** (ஏசாயா 1:17 )

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஆசீர்வதிக்கும் **இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் இன்றைய தினமதிலும் வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.** தேவ பிள்ளைகளே! மனிதர்களாகிய எம் இதயத்திலே அநேக **எதிர்பார்ப்புகளும், விருப்பங்களும்** உண்டு. ஆனால் அவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்படி அநேக **முயற்சிகளை** மேற் கொண்ட போதிலும் அவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போய் விடும். **எதிர்பார்ப்புகள் தோல்வியடையும் சந்தர்ப்பங்கள்** அநேகம். அதேவேளை வேறு மனிதர்கள் **வெற்றியடையும்** போது, நம் எதிர்பார்த்த காரியங்கள் அவர்கள் வாழ்வில் நிறைவேறும் போது எம் இருதயத்தில் அவர்களை குறித்து **பொறாமை** ஏற்படும்.

தேவனுடையவர்களே! இன்றைய தின இந்த மன்னா இதழின் தேவ செய்தியை வாசிக்கும் வாசக நேயர்கள் யாராவது **எதிர்பார்ப்புகள்** நிறைவேறாது **ஆசைகள் நிராசைகளாக** மாறிய நிலையில் **விரக்தியுடையவராக** இருக்கின்றீர்களா? மற்றவர்களின் வாழ்வில் காணப்படும் வெற்றி, களிப்பு, மேன்மை பாராட்டு இவைகளினால் உங்கள் உள்ளத்தில் ஏற்பட்ட **கசப்பு, கோபம், பொறாமையின்** நிமித்தம் வாழ்க்கையில் தனிமைப்பட்டு நிற்கிறீர்களா? **உங்கள் இருதயம் கலங்கதிருப்பதாக!** உங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்கள் உள்ளத்தின் **விருப்பங்களை அறிந்து ஆசீர்வதிக்க** வல்லவராயிருக்கிறார். அவரின் ஆசீர்வாதம் **ஐசுவரியத்தைக்** கொண்டு வரும். உங்கள் துக்கங்கள் அகன்று போம். உங்களுக்கு **உடமைகளையும், கௌரவத்தையும்** தருபவர் அவரே! உங்களை **மேன்மைப்படுத்தி, பெலப்படுத்தும் வல்லமை** அவர் கரத்திலே உண்டு. ஆகையால் **முழு உள்ளத்துடன்** அவரை தேடுங்கள்.

தேவ பிள்ளைகளே! தேவ **ஆசீர்வாதத்தை** நீங்களும் பெற்றுக் **வாஞ்சிக்கிறீரகளா?** முழு உள்ளத்தோட அவரை **சேவியுங்கள்** உங்கள் இருதயத்தை **பரிசுத்தமாய்** காத்துக் கொள்ளுங்கள். இன்றைய தின செய்தியின் பிரதான வாக்கியமும் இதையே கூறுகிறது. தேவன் உங்கள் வெளியரங்கமான சுத்தத்தை அல்ல உங்கள் **இருதயத்தின் பரிசுத்தத்தையே** விரும்புகிறார். உங்கள் உள்ளம் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடையும் போது தேவனுக்கு உகந்த **காணிக்கையாய் ஒப்புக்கொடுக்கும்** பேது உங்கள் உளளத்தின ஆசைகளையும், அற்கு மேற்பட்ட **பரலோகத்தின் ஈவுகளையும்** உங்கள் மீது ஆசீர்வாதமாக பொழிந்தருளுவார். இன்று **உங்களுக்கு வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

என் கன்மலையான தேவனே! பரிசுத்த உள்ளத்தில் ஆசைகளை நிறைவேற்றுபவரே! நான் பரிசுத்த வழியில் நடதந்து என் உள்ளத்தை பரிசுத்தமாக காத்து உங்களிடம் ஒப்புவித்து சகல ஆசீர்வாதங்களையும பெற்றுக் கொள்ள ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன்.."
(லேவியராகமம் 20:26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 29 செவ்வாய்

**எமது எதிர்காலங்களை தீர்மானிக்கும் பரமண்டலங்களில் இருக்கிற பிதாவானவர் !**

இன்றைய வேதவாசிப்பு

ஏசாயா அதி: 06 – 07

**“கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது.”** (சங்கீதம் 105:19 )

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! சதாகாலங்களிலும் எங்களோடிருக்கிறவரும், நாள் தோறும் எம்மை வழி நடத்துகிறவருமான ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றைய தினம் நன்மைக்கேதுவான நல்ல நாளாக** அமையுமாறு ஆசீர்வதிக்கிறேன். மனிதன் தன் வாழ்வைக் குறித்து செயல்ப்படுத்தும் தீர்மானங்கள் சிலந்தி வலையைப் போல் இருக்கிறது என தோன்றுகிறது. சிலந்தி வெகு பிரயாசப்பட்டு கட்டிய அவ்வலை அறுந்து அழிந்து போகும் சந்தர்ப்பங்கள் அநேகமாயிருக்கும். **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்வில் மிக சக்தி வாய்ந்த வேறுபடாத தீர்மானங்களையும், திட்டங்களையும் வகுத்து தரக் கூடியவர் ஒருவர் இருக்கிறர். அது எமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே! அவருக்கு சகலமும் செயல்படுத்த முடியும். **அவர் செய்ய நினைத்தது ஒரு போதும் தடைபடாது.** அவர் சகலவற்றையும நன்மையாக மாற்றுவார். ஆகையால் உங்கள் வாழ்வை குறித்தோ உங்கள் எதிர்காலத்தைக் குறித்தோ, நினைத்து உங்கள் உள்ளம் வேதனை அடையாதிருக்கட்டும். முக்கியமாக இன்றைய நாளைக் குறித்தோ, நாளைய நாளைக் குறித்தோ, எண்ணி உள்ளத்தில் வேதனையடையதீர்கள் தற்போதும உங்கள் வாழ்வில் எதிர்கால திட்டங்கள் நொறுங்கி போனதின் நிமித்தம் உள்ளம் வேதனையில் நிரம்பியிருக்கக் கூடும். ஆயினும் ஆண்டவருடைய சுய விருப்பத்தின்படி தெரிந்துக் கொள்ளப்பட்ட உங்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே அமையும்! என வேத வசனம் கூறகிறது.

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 105:19**இல் தலைப்பு வசனம் எடுத்துரைக்கும் சம்பவம் யாக்கோபு என்பவருடைய மகன் யோசேப்பை குறித்ததாகும். **கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனை புடமிட்டது** எனக் கூறுகிறது. யோசேப்பு அவனுடைய மூத்த சகோதரனால் இருபது வெள்ளிக்காசுக்கு எகிப்தியருக்கு விற்கப்பட்ட நாள் முதல் அவர் அத் தேசத்தின் அதிபதியாகும்வரை அவனைக் குறித்து கர்த்தர் வைத்திருந்த திட்டம் நிறைவேறுமளவும் அவனது வாழ்வில் அநேக துன்பங்கள், இக்கட்டுகள், அவமானங்கள். பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க நேர்ந்தது. அந்த ஒவ்வொரு துன்ப வேளையிலும் தேவன் அவனோடிருந்து அவனைப் பெலப்படுத்தி முன்னோக்கி வழி நடத்திச் சென்றார். ஏனெனில் அவனுக்கு எத்தனை இன்னல்கள் வந்த போதிலும் கடவுளுக்கு கீழ்ப்படிந்து நடந்தான். அதே போல் நீங்களும் தேவன் உங்களுக்கு காட்டும் பாதையில் முன்னோக்கிச் செல்லுங்கள். உங்கள் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கும். **உங்களுக்கு வெற்றியின் நாள்!**



ஜெபம்

பரமண்டங்களில் இருக்கிற என் பிதாவே! யோசேப்பின் தேவனுமானவரே! என்னைக் குறித்து பெரியதீர்மானம் வைத்திருப்பவரே! உங்களைக்குக் கீழ்ப்படிந்து சகல ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்ளும்படி என்னை வழி நடத்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய்; ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்.” (ஏசாயா 60:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஏப்ரல் 30 புதன்

## துயரப்படுகிறவர்களின் நியாயதிபதியாகிய கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு

ஏசாயா அதி: 08 – 09

"அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்…" (சங்கீதம் 146:7)

அன்பும், பிரியமும், வாஞ்சையுமுள்ள தேவ பிள்ளைகளே! **இந்தப் புதிய தினமதில் இனிமையான காலைப் பொழுதினிலே வல்லவரும், ஜீவிக்கிறவருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தால் என வாழ்த்துகிறேன்.** பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தல் என்னும் புத்தகத்தின் தேவ வாக்கின்படி இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன **வசனங்களைக் வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும் வசனங்களைக் கைக் கொள்கிறவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்** ஆவார்கள். ஆகையால் இன்றைய தினத்திலும் நீங்களும் **ஆசீர்வதிக்கபட்டவராவீர்கள்.**

தேவ பிள்ளைகளே! உலகவாழ் ஜனங்களுடைய தேவைகளைக் குறித்து **அக்கறையுடன்** தேடிப் பார்த்து ஒத்தாசை செய்யவும் **ஆத்மீக,** சரீர கட்டுகளில் இருந்து விடுதலையை பெற்றுக் கொடுக்க வாழ்க்கையில் அருள் புரியும்படியாக படைப்பின் தேவன் தாமே **அருபியாக** எம் மத்தியில் கிரியை செய்கிறார் என்பதை உலகத்தினர் **விசுவாசிப்பதில்லை.** ஆயினும் **"ஜீவ மன்னா"** நாளிதழுக்கூடாக நாள்தோறும் வாசித்து **தியானிக்கும்** செய்திகள் மூலமாக உங்கள் இதயங்களில் **பலத்த விசுவாசத்தை** கர்த்தர் ஏற்படுத்துகிறார். ஆகையால் நீங்கள் **விஷேசித்தவர்கள்** ஆரம்பத்தில் **ஆயிரம் பிரதிகள்** அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்ட இம் **"ஜீவ மன்னா"** சஞ்சிகை தற்போது **பத்தாயிரம் பிரதிகள்** அச்சடிக்கப்படுகிறது. மூன்றரை வருடக்காலமாக தொடர்ந்து **இச் சஞ்சிகையை** உங்கள் கரங்களுக்கு கிடைக்கச் செய்வது எம் பரலோக தந்தையின் விருப்பமே. அது உங்கள் **உள்ளங்களில் விசுவாசத்தை வளரச்** செய்யவே என **விசுவாசிக்கிறேன். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!"** இந்நாளிலும் **துன்பங்கள், பிரச்சினைகள், நிந்தைகள், வேதனைகள், அவமானங்கள் மத்தியில் விரக்தியாக ஜீவிக்கிறீகளா?** உங்கள் உள்ளம் **வேதனையடைந்திருப்பதால் நிம்மதி இல்லாதிருக்கிறீர்களா?** ஆனால் அப்படி வாழ்வது உங்கள் பரலோக தகப்பனின் விருப்பம் அல்ல

பிரியமானவர்களே! உலகில் **பாவம் பெருகிக் கொண்டிருக்கிறது. சாத்தானுடைய செயல்களுக்கு** உடன்பட்டு கிரியை செய்யக் கூடிய அநேக **தீய செயல்பாடுகள் இவ் நவீன** உலகில் பெருகிக் கொண்டிருப்பதால் மனிதர்களுடைய வாழ்க்கையில் **அநேக துன்பங்கள்** ஏற்படுகிறது. **ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்** செய்யும் ஆண்டவர் நமது தேவன் என தலைப்பின் வாக்கியம் உரைக்கிறது. ஆகையால் **துன்பப்படுவர்கள் இடைவிடாது தேவ பாதத்தில் ஜெபம் செய்யுங்கள்.** உங்களை அதிகமாய் நேசிக்கும் தேவன் தாமே உங்கள் வேதனைகளை அறிகிறார். **உங்கள் கண்ணீரை** காண **பொறுக்காத** தேவன் உடனடியாக **விடுவிக்கும்படி செயல்படுவார்.** சாத்தானை தோல்வியடையச் செயது நீங்கள் **ஜெயம் பெற வேண்டும்** என்பதே அவரது விருப்பமாக இருப்பதால் உங்களுக்கு உதவி செய்து வெற்றியை பெற்றுத் தருவார். **இன்று வெற்றியின் நாள்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் அன்புத் தகப்பனே! ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்யும் தேவனே! என் துன்பங்களை அறிகிறவரே நீங்கள் இன்று எனக்கு நியாயம் செய்யுமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

**"கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்." (சங்கீதம் 37:28)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீக வாழ்வில் வளர்ச்சியடைய ஆலோசனைகள் சோர்ந்து போகாது!

## (01) ஜெபித்தல் (பரி.லூக்கா 18:1)



இதைக் குறித்து முயற்சி செய்யுங்கள். உங்கள் ஜெப நேரங்களை உங்களுக்கும் தெரியாமல் திருடுவதற்கு முயற்சி செய்கின்ற உங்கள் எதிராளியான பிசாசின் உபாயங்களை நீங்கள் புரிந்து அதற்கு எதிர்மாறாக நீங்கள் தெளிந்த புத்தியோடு காரியங்களைச் செய்யுங்கள். அத்தோடு நீங்கள் தேவ இராஜ்ஜியத்தின் காரியங்களில் எல்லா வேளையிலும் கருத்தைச் செலுத்துங்கள். சோர்வடையாது தைரியமாக செயற்படுங்கள். எந்நேரமும் பரிசுத்த ஆவியில் நிறைந்து வாழ்வதற்கு தேவ அக்கினியை பெற்றுக் கொள்ளுங்கள். எல்லாரிடமும் சமாதானமுள்ளவர்களாக பரிசுத்தமுள்ளவாகளாக வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

இப்படியாக நீங்கள் வாழக்கையை நடத்துவீர்காளல் ஆத்மீக வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ள தேவன் உதவி செய்வார்.

## (02) தசம பாகம் கொடுத்தல் (மல்கியா 3:10)

உங்கள் அனைத்து கைக்கிரியைகளும் ஆசீர்வாதம் உண்டாயிருக்கியிருக்கும்படித் தசம பாகங்களை தேவ ஆலயத்திற்கு கொண்டு வர வேண்டும். இன்னும் தேவன் உலகில் எமக்கு வாழ அநுக்கிரகம் கொடுத்த ஒவ்வொரு நாளிலும் நேரத்திலும் தசம பாகத்தை தேவனுக்கு வேண்டியது பின்வருமாறு




☞ மணித்தியாலத்திலிருப்பது 60 நிமிடம் ஆகும். நிமிடம் 60 க்கும் தசமபாகம் 6 நிமிடமாகும்.

☞ ஒரு நாளில் 24 மணித்தியாலயம் இருக்கின்றது. 24 மணித்தியாலத்திற்குரியதான தசமபாகம் 24×6=144 நிமிடம்




☞ அப்பொழுது ஒரு நாளைக்கு நாங்கள் கொடுக்க வேண்டிய தசமபாகமானது மணித்தியாலத்தில் பார்க்கும் போது
2 மணித்தியாலங்களும் 24 நிமிடமுமாகும்.

**நிமிடம் 144 ÷ நிமிடம் 60= " 2 மணித்தியாலங்களும் 24 நிமிடமுமாகும்."**



அத்தோடு அதற்கு மேலதிகமாக உங்களுக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களின்படி அதிகமாக தேவ பாதத்தில் நேரத்தை செலவிடுவீர்களாயின் அதிக பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

## (03) சவால்களைக் கடந்து முன் பயணித்தல் (பிலிப்பியர் 3:12~14)

நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நானே உங்களைத் தெரிந்துக் கொண்டேன் என்று கூறிய இயேசுகிறிஸ்து தேவனின் அழைப்பைப் பெற்ற எம்மை இருளினின்று வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். எங்களுக்கு ஜீவனைப் பெற்றுத் தந்தார். பரலோக இராஜ்ஜியத்திற்கு சொந்தமான பிள்ளைகளாக்கினார். ஆகையால் தேவ இராஜ்யத்தின் உரிமையை இழந்த தூதர் சேனைகள் எங்களுக்கு விரோதமாக செயற்படும் அவைகள் மாம்சத்தின் கிரியைகள் அல்ல என்பதனை எபேசியர் 6:12இல் தேவ வசனத்தின்படி அறிகிறதோடு அது ஆவிக்குரிய போராட்டம் என்பதனை அறிகின்றோம். அது எந்த வேளையிலும் திகழ முடியும்.



உதாரணம்: எனது 13 வருட தனி ஊழியத்திற்குள் இப்படியான போராட்டம், சவால்கள் சுமார் 13000 போன்று ஏற்பட்டிருக்கலாம். அதற்கு அதிகமாயிருக்கலாம். ஆனால் குறைவாக இருக்காது. என்னுடைய இயேசுகிறிஸ்து அவை அனைத்திலும் அற்புத வண்ணமாக வெற்றியைக் கொடுத்து ஊழியத்தின் வளர்ச்சியை முன் கொண்டு வந்தார். இப்படியான ஆத்மீக சவால்கள் உங்கள் ஆவிக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் யுத்தத்தில் வெற்றி பெற்ற உங்களுக்கு நல்லதொரு பெலனும் கிடைக்கும். தேவன் பேரில் உங்கள் விசுவாசம் அதிகரித்து விசுவாசத்தில் நல்லதொரு நிலைக்கு வர முடியும்.

### (04) விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும் (எபிரேயர் 10:38)

சாத்தானது நரகாக்கினிக்கு இரையாக்கும். தீய சிந்தைனைகளை உங்களுக்கு விரோதமாக சாத்தான் எழுப்பும் போது உங்கள் விசுவாசம் என்னும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாய் அவைகளுக்கு அகப்படாத வண்ணம் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களை என்னுடையவர் என்றழைத்து சகல ஜாதிகளின் மத்தியில் உங்களை தேவனின் சொந்த பிள்ளைகளாக வேறுபடுத்திய தேவ பிதா இன்றும் உங்களோடிருந்து இயேசுகிறிஸ்துவுக்கூடாக உங்களுக்கு துணை செய்கின்றார். ஏன் முழ உள்ளத்தோடு விசுவாசித்து பொல்லாங்களின் தந்திர ஆலோசனைகளுக்கு விரோதமாக நில்லுங்கள். சாத்தானின் துர் ஆலோசனைகள் உங்களுக்கு தூரமாகி விட்டு அகன்று ஒழிந்து போவதாக. அந்த தீய ஆலோசனைகளை தேவனின் பற்றி எரியும் பரிசுத்த அக்கினியிலே புடமிட்டு உங்கள் உள்ளத்தை, நினைவுகளை பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.






இவைகள் உங்கள் வாழக்கையில் ஆத்மீக வளர்ச்சியை அதிகரிக்க பேருதவியாக அமையும்.

**விஷேச செய்தி**

இந்த கருத்துக்களை வாசிப்பதில் திருப்தியாகதபடி உங்கள் ஆத்மீக சவால்களின் போது நீங்கள் இவ்விதமாக செயற்பட்டு வெற்றியைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனாலும் அதைரியப்பட்டீர்களானால் நாளுக்கு நாள் பரிசுத்த ஆவியில் அக்கினியில் குறைந்து இடறிப் போக நேரிடும். அப்படி நடக்காதபடி உங்களை நீங்கள் காத்துக் கொள்ளுங்கள். யெகோவா நிசி தேவன் எங்களோடிருப்பதால் பரி.லூக்கா 10:19இல் சத்துருவின் சகல வல்லமையையும் மேற் கொள்ள இயேசுகிறிஸ்து எங்களுக்கு அதிகாரங் கொடுத்துள்ளமையால் நீங்கள் தைரியமாக, பயமில்லாது முன்னோக்கிச் செல்லுங்கள். உங்களுக்குள் ஆளுகை செய்யும் பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆத்மீக பயணத்தில் முன்னோக்கிச் செல்ல உங்களுக்கு வழிகளைத் திறந்து தருவார். வழி நடத்துவார். வல்லமையான தேவன் உங்களோடிருப்பார்.

## இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு "வெற்றி"!

இயேசு துணை!!!

## இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!!!

31 வது வெளியீடு



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N:- CME/003/12/NPO


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.
☎ 011-2334865 ✆ 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு 14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org